Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, MARCH 14, 2022

திங்கட்கிழமை மார்ச் 14, 2022 | ஒளி: 07 கதிர்: 255 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | Free




இன்று நள்ளிரவு முதல்

## பஸ் கட்டணத்தை அதிகரிக்கத் தீர்மானம்

### கொள்கலன் கட்டணம் உயர்ந்தது

பஸ் கட்டணத்தை இன்று (14) நள்ளிரவு முதல் அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் கொமாண்டர் நிலான் மிராண்டா, நேற்று (13) தெரிவித்தார்.

பஸ் சங்கங்கள் முன்வைத்த கோரிக்கைகளை பரிசீலித்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் கட்டண திருத்தங்கள் அமைச்சரவையில் இன்று (14) சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி பெறப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## அடுத்தவாரம் இந்தியா செல்கிறார் பசில்

நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ, அடுத்தவாரம் இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளார் என, இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது. “நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவை, அடுத்தவாரம் இந்தியாவுக்கு வரவேற்பதற்கு ஆவலுடன் காத்திருக்கின்றோம். இந்தியா - இலங்கை இடையிலான பொருளாதார பங்குடைமையை மேலும் வலுவாக்குவதற்கான தற்போதைய முயற்சிகளை அவரது விஜயம் வலுவூட்டும்” என அந்தப் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

எவ்வித நிபந்தனையுமின்றி

# ஜனாதிபதியோடு பேசத் தயாரில்லை

> போராட்டங்களை நடத்தினால்தான் எங்களுடைய உரிமையை பெற முடியும்

> தன்னையும் அரசையும் தப்பவைப்பதற்காக எங்களோடு பேச முடியாது



■ க. அகரன்

தமிழ்த் தேசிய கூட்டமைப்போடு என்ன விடயத்தை பேசப் போகிறேன் என்று எதையும் குறிப்பிடாது, வாருங்கள் என்று கூறினால் நாங்கள் மீண்டும் மீண்டும் ஏமாறுவதற்கு தயாராக இல்லை என்று தெரிவித்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம், எவ்வித நிபந்தனையுமின்றி நாம் ஜனாதிபதியோடு பேசத் தயாராக இல்லை என்று தெரிவித்தார்.

வவுனியாவில் சிறிநகர் மக்களின் 25 வருட கோரிக்கையாக இருந்த விளையாட்டு மைதானத்தை சனிக்கிழமை (12) திறந்து வைத்ததன் பின்னர் உரையாற்றும் போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், “நாங்கள் பல போராட்டங்களை நடத்தினால்தான் எங்களுடைய உரிமையை பெற முடியும். நாங்கள் போராடாமல் வீட்டுக்குள்ளே இருந்தால் எங்களுடைய உரிமையை நிச்சயமாக பெற்றுக்கொள்ள முடியாது.

ஜனாதிபதி, எதிர்வரும் 15ஆம் திகதி தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் பேச அழைப்பு விடுத்திருக்கிறார். நாடு தற்போது இக்கட்டான நிலைமையில் இருந்து கொண்டு இருக்கின்றது. அத்தியாவசிய பொருட்களுக்கான தட்டுப்பாடுகளும் வரிசையாக நிற்கின்ற யுகத்தை மீண்டும் சந்திக்கின்ற நிலைமை வந்து கொண்டிருக்கின்றது. எந்தப் பொருளை வாங்குவதானாலும், வாங்க நினைத்தாலும் கூட நாங்கள் வரிசையில் நின்றுதான் வாங்குகின்ற நிலைமை வந்து கொண்டிருக்கின்றது.

தொடர்ச்சி P2

எரிவாயு, எரிபொருள்

## வரிசைகளுக்கு முடிவுகட்ட 7 மாதங்கள் செல்லும்



தற்போதைய எரிபொருள் மற்றும் எரிவாயு வரிசையை முடிவுக்கு கொண்டுவர குறைந்தது இன்னும் ஏழு மாதங்களாகும் என்று தெரிவித்த எரிசக்தி அமைச்சர் காமினி லொகுகே, உலக அரங்கில் ஏற்பட்டுள்ள சூழ்நிலையை கட்டுப்படுத்த முடியாமல் அரசாங்கம் திணறுகிறது என்று தெரிவித்தார்.

உலகளாவிய பொருளாதார நிலைமை வீழ்ச்சியடைந்துள்ள நிலையில், நாடுக்கு டொலர்களை கொண்டு வருவதற்கு தேங்காய்களை விற்க முடியாது எனவும் டொலர்களை கொண்டு வருவதிலுள்ள சிரமத்தின் ஆரம்ப கட்டத்தில் உள்ளோம் என்றும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## பெருந்தோட்டத்துறையின் ‘சிஸ்டம்’ மாறவில்லை

### நிலைமை மாறவேண்டும் என்கிறார் ஜீவன்

■ எஸ்.கணேசன்



“நாட்டிலுள்ள எல்லா துறைகளிலும் இன்று ‘சிஸ்டம்’ மாறியுள்ளது. ஆனால் பெருந்தோட்டத்துறை மட்டும் 150 ஆண்டுகளுக்கு மேலாக அப்படியே உள்ளது” என்று தெரிவித்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான், “இந்நிலைமை மாற வேண்டும். அதனை செய்வதற்கே நாம் வந்துள்ளோம். இதற்கு மக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்” என்று தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## மின் கட்டணத்தை செலுத்தவில்லையா?

### நிரூபிக்குமாறு ஹரின் எம்.பி சவால்

மின்சாரக் கட்டணத்தைச் செலுத்தத் தவறியதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டை நிராகரித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ, 2019 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தனது உத்தியோகபூர்வ இல்லத்தில் தாம் தங்கியிருக்கவில்லை என தெரிவித்தார்.

மின்சாரக் கட்டணத்தைச் செலுத்தத் தவறியதாக என்னைக் குற்றம் சாட்டுபவர்கள், நான் அதைச் செய்துள்ளேன் என்பதையும், கொழும்பில் எனக்குச் சொந்தமாக வீடு உள்ளது என்பதையும் நிரூபிக்குமாறு நான் சவால் விடுகிறேன் என்று சவால்விட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## அரசாங்கத்தை கைவிடாது ‘கை’

### தாக்குதல் வேண்டாம் என ஜனாதிபதியிடம் சு.க கோரிக்கை

தற்போதைய சூழ்நிலையில் அரசாங்கத்தில் இருந்து விலகப்போவதில்லை என, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளதாக கட்சி வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன.

நாடு நெருக்கடியான நிலையில் உள்ள நேரத்தில் அரசாங்கத்தை விட்டு வெளியேறுவது ஏற்புடையதல்ல என்றும் இந்த நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கு அரசாங்கத்துடன் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்றும் அக்கட்சி கருதுவதாக அறியமுடிகிறது.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் குழுவிலுள்ள 14 பேரில், பெரும்பான்மையானவர்கள் இந்தக் கருத்தையே கொண்டுள்ளனர் என்று கட்சி வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

தொடர்ச்சி P2

## முதலீட்டு வாய்ப்புகளை அழிக்கும் அரசியல்வாதிகள்



2020ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021ஆம்ஆண்டு வெளிநாட்டிலிருந்து அனுப்பப்பட்ட தொகை 2 பில்லியன் அமெரிக்க டொலர்களால் குறைந்துள்ளதாக தெரிவித்த மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா, முதலீடு செய்ய பலர் ஆர்வம் காட்டி வருகின்ற போதிலும் அரசியல்வாதிகளின் செயற்பாடுகளால் இலங்கையில் முதலீட்டு வாய்ப்புகள் அழிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று (13) ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

வெளிநாடுகளுக்கு அனுப்பும் பணத்தின் மூலமான இலங்கையின் முக்கிய வருமான ஆதாரத்தை இழந்துள்ளதாகவும் புதிய அரசாங்கம் ஒன்று நியமிக்கப்பட்டு, உத்தியோகபூர்வ வழிகளில் தங்கள் பணத்தை இலங்கைக்கு அனுப்புமாறு புலம்பெயர்ந்தவர்களைக் கோரினால், அவர்கள் நாட்டுக்கு ஆதரவளிப்பார்கள் என்று அவர் கூறினார்.

தொடர்ச்சி P2




## அரசாங்கத்துக்கு எதிரான

### போராட்டத்துக்கு எதிர்க்கட்சி முஸ்தீபு

அரசாங்கத்துக்கு எதிராக நாளை 15 ஆம் திகதி பிற்பகல் 1 மணிக்கு போராட்டமொன்றை கொழும்பில் நடத்தவுள்ளதாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது. கொழும்பில் நேற்று (13) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்த அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ மேலும் தெரிவிக்கையில்,

தொடர்ச்சி P2

## நிதியமைச்சர் பசிலுக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம்



நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரப்படவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் கட்சிக்குள் ஏற்கெனவே கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டு உள்ளதாகவும் குறிப்பிட்டார். நாட்டில் நிலவும் நிதி நெருக்கடி மற்றும் அதன் நிர்வாகம் தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்காமை, நாட்டின் பொருளாதார நிலை குறித்து பாராளுமன்றத்துக்கு தெரிவிக்காமை மற்றும் பதிலளிக்காமை போன்ற காரணங்களை கருத்திற்கொண்டே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார். இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவும் கட்சி முகாமைத்துவக் குழுவும் கலந்துரையாடி உடனடி நடவடிக்கை எடுப்பதாக அத்தநாயக்க மேலும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## ‘மஹிந்த சூறாவளி’ வீசிய இடத்தில் மற்றுமொரு ‘சூறாவளி’?

### விமல், கம்மன்பில உட்பட பங்காளிகள் திட்டம்



அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கப்பட்ட முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவன்ச மற்றும் உதய கம்மன்பில ஆகியோரின் கட்சிகள் உள்ளிட்ட பங்காளிக் கட்சிகள், மக்கள் பேரணியொன்றை கொழும்பில் நடத்தத் திட்டமிட்டுள்ளன என அறியமுடிகிறது.

2015ஆம் ஆண்டு ஜனவரியில் மாதம் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்ததையடுத்து ‘மஹிந்த சூறாவளி’ என்ற பெயரில் நுகேகொடையில் கூட்டம் நடைபெற்ற அதே இடத்திலேயே, இதுவும் நடைபெற வாய்ப்புள்ளதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் அரசாங்கப் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் கலந்துகொண்ட கலந்துரையாடலில் இவ்விடயம் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டதாகவும் இம்மாத இறுதியில் கூட்டம் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை, நாடு முழுவதும் மாவட்ட மட்டத்தில் கூட்டங்களை நடத்த பங்காளிக் கட்சிகளும் தீர்மானித்துள்ளதாக தெரியவருகிறது.

PAGE 1 தொடர்ச்சிகள்

## அடுத்தவாரம் இந்தியா செல்கிறார் பசில்

உயர்ஸ்தானிகராலம் சனிக்கிழமை (12) பதிவிட்ட டுவிட் பதிவிலேயே மேற்குறிப்பிட்ட விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்ரமணியம் ஜெய்சங்கர், கடந்த திங்கட்கிழமை (07) பிற்பகல் நிதியமைச்சர் பசில் ராஜபக்‌ஷவுடன் தொலைபேசியில் உரையாடியிருந்தார்.

இதனையடுத்து இந்த மாதத்தின் இரண்டாவது பாதியில் இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளதாக இந்திய உயர்ஸ்தானிகராலயம் ஏற்கெனவே அறிவித்திருந்தது.

இலங்கைக்கு சாத்தியமான அனைத்து வழிகளிலும் உதவ இந்தியா தயாராக இருப்பதாகவும் இந்திய வெளிவிவகார அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

"சிறிது நேரத்துக்கு முன்னர், வெளியுறவு அமைச்சர் டொக்டர் எஸ். ஜெயசங்கர் மற்றும் நிதியமைச்சர் பசில் ராஜபக்‌ஷ ஆகியோர் தொலைபேசியில் பயனுள்ள மற்றும் அன்பான உரையாடலை நடத்தினர். இலங்கைக்கு அனைத்து வழிகளிலும் இந்தியா தொடர்ந்து ஆதரவளிக்கும் என வெளிவிவகார அமைச்சர் உறுதியளித்தார்" என்று உயர்ஸ்தானிகராலயம் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பெருந்தோட்டத்துறையின் 'சிஸ்டம்' மாறவில்லை

பாலின சமத்துவம் என்ற தொனிப்பொருளின் கீழ் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மகளிர் தின விழா கொட்டகலையில் நேற்று (14) நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கப்பல் துறை, ஹோட்டல்துறை என எல்லாத் துறைகளிலும் 'சிஸ்டம்' மாறியுள்ளது. ஆனால் பெருந்தோட்டத்துறை மட்டும்தான் மாறவில்லை. நமது அழிவுக்கு நாமேதான் காரணம்.

ஏனெனில், நாளொன்றுக்கு 20 கிலோ கிராம் கொழுந்து பறிக்க முடியாது, தோட்டங்கள் எல்லாம் காடாகியுள்ளன என தோட்டத் தொழிலாளர்களுக்காக நாம் நீதிமன்றத்தில் வாதிட்டு வருகிறோம்.

> **தொழிலாளர்களை ஊக்குவிப்பதற்காக அல்ல, சமாதி கட்டவே கொழுந்து பறிக்கும் போட்டி நடத்தப்படுகிறது. இது நமக்குப் புரிவதில்லை. இதனை சொன்னால், ஜீவன் தொண்டமான் விமர்சிக்கின்றார் என கூறுகின்றனர். எனக்குப் பாராட்டிப் பேசிப் பழக்கம் இல்லை**

ஆனால், நிர்வாகங்களால் நடத்தப்படும், கொழுந்து பறிக்கும் போட்டியில் பங்கேற்று, 3 மணிநேரத்துக்குள் 40 கிலோ கிராம் பறிந்துள்ளனர். கோடி நன்றிகள், பாராட்டியே ஆக வேண்டும். 20 கிலோ கிராம் பறிக்கமுடியாது என்கிறீர்கள்; அங்கே 40 கிலோ கிராம் பறிக்கின்றனரே என எம்மிடம் கேட்கப்படுகின்றது.

தொழிலாளர்களை ஊக்குவிப்பதற்காக அல்ல, சமாதி கட்டவே கொழுந்து பறிக்கும் போட்டி நடத்தப்படுகிறது. இது நமக்குப் புரிவதில்லை. இதனை சொன்னால், ஜீவன் தொண்டமான் விமர்சிக்கின்றார் என கூறுகின்றனர். எனக்குப் பாராட்டிப் பேசிப் பழக்கம் இல்லை. தவறு இடம்பெற்றால் அதனை தைரியமாக சுட்டிக்காட்டுவேன்.

மலையகத்தில் அமைச்சு பதவியை வகித்தவருக்கும், எனக்கும் இடையில் தனிப்பட்ட ரீதியில் முரண்பாடு இல்லை. அரசியல் ரீதியிலான முரண்பாடுகளே உள்ளன. மலையக மக்களுக்காக இறுதி மூச்சு இருக்கும்வரை செயற்படுவேன் என அவர் கூறியுள்ளார்.

அந்தச் செய்தி சமூக ஊடகங்களில் வந்ததும், 'நீ எப்ப செத்துபோவ' என சிலர் கருத்து பதிவிடுகின்றனர். இப்படியான அரசியல் வேண்டாம்; நமது கலாசாரமும் மாறவேண்டும்.

மலையக பெருந்தோட்டப்பகுதிகளில் உள்ள சுகாதார துறையை மத்திய அரசு பொறுப்பேற்றுள்ளது. அதற்கு நாம்தான் காரணம். ஆனால் அதனை வைத்து அரசியல் செய்யவில்லை. நாம் 10 விடயங்களை செய்தால்கூட, செய்யாத 11 ஆவது விடயம் பற்றியே பேசப்படுகின்றன.

நம்பிக்கையை இழந்துவிடவேண்டாம். இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பயணம் தற்போது சற்று மெதுவாக இருந்தாலும் நாம் முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கின்றோம் என்பதைக் கூறியாக வேண்டும். காங்கிரஸ் என்றும் உங்களுடன் இருக்கும் என்றார்.

# ஜனாதிபதியோடு பேசத் தயாரில்லை

எரிபொருள், எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன் விலை தொடர்ந்து அதிகரித்த வண்ணமே உள்ளது. இது போன்றே பல பொருட்களும்; ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பொருட்களின் விலை உயர்ந்து கொண்டு இருக்கின்றது. இந்த நாட்டை ஆள முடியாமல் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்‌ஷ மிகவும் தடுமாறிக் கொண்டு இருக்கின்றார். அவரின் தலைமையிலான அரசாங்கம் இந்த நாட்டை ஆள முடியாமல் தத்தளித்து கொண்டிருக்கிறது.

அவருக்கு ஆதரவாக வாக்களித்த 69 இலட்சம் மக்களும் அவரை இன்று துரத்தியடிக்க வேண்டும்; அவர் இந்த நாட்டை ஆளத் தகுதி இல்லாதவர் என்று சொல்கின்ற நிலைமை உருவாகியுள்ளது. இந்த நாடு வெளிநாடுகளில் பிச்சை எடுத்துக்கொண்டு இருக்கின்றது. இனி இந்த நாட்டில் இருக்கின்ற ஒவ்வொரு குடிமகனும் பிச்சை எடுக்கின்ற நிலைமை இருக்கின்றது.

இப்படியான நிலைமையில் நாட்டை ஆட்டங்காண வைத்து அதளபாதாளத்தில் தள்ளிவிட்டு, தான் தப்புவதற்காக இவ்வளவு காலமும் பேச முடியாத நிலைமையில் இருந்துகொண்டு ஐ.நா மனித உரிமைகள் பேரவையிலே கேள்வி மேல் கேள்வி தொடுக்கப்பட்டு கொண்டு இருக்கின்ற இந்த நேரத்தில், தன்னையும் அரசையும் தப்பவைப்பதற்காக எங்களோடு பேச வேண்டும் என்ற வார்த்தை கூறப்பட்டிருக்கிறது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்போடு என்ன விடயத்தை பேச போகிறேன் என்று எதையும் குறிப்பிடாது வாருங்கள் என்று கூறினால் நாங்கள் மீண்டும் மீண்டும் ஏமாறுவதற்கு தயாராக இல்லை.

முதலில் அவர்கள் இங்கே தமிழ் மக்களுக்கு ஒரு பிரச்சினை இருக்கிறது என்பதனை ஏற்றுக்கொள்ள வேண்டும். எந்தவித நிபந்தனையும் இல்லாமல் சென்று அவர்களோடு எதை பேச வேண்டும்.

தற்போதைய நாட்டின் உடைய நிலைமையில் இருந்து சர்வதேச ரீதியாக அல்லது ஐ.நா மனித உரிமை பேரவையின் ஊடாக அல்லது அயலில் இருக்கின்ற மிகப்பெரிய வல்லரசு நாடாகிய இந்தியாவினுடைய தலையீட்டில் இருந்து தப்புவதற்காக எங்களை பகடைக்காயாக பயன்படுத்துவதை ஒரு போதும் ஏற்று கொள்ள போவதில்லை.

தமிழ் மக்களுடைய அரசியல் பிரச்சினையும் தீர்க்க போவதில்லை, பொருளாதார பிரச்சினையும் தீர்க்க போவதில்லை. ஆகவே தான் கூறுகின்றேன் இந்த போராட்டத்தின் மூலம் வெற்றி அடைந்தது போல் எதிர் காலத்திலே நாம் ஒவ்வொன்றிற்காகவும் போராட வேண்டிய நிலைமை இருக்கின்றது" என மேலும் தெரிவித்தார்.

## பஸ் கட்டணத்தை அதிகரிக்கத் தீர்மானம்

ஆகக் குறைந்த பஸ் கட்டணமான 17 ரூபாய் அல்லது 19 ரூபாயாக உயர்த்தப்படலாம் என, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தகவல்கள் மூலம் அறியமுடிகிறது.

இதேவேளை, சரக்கு கொள்கலன் கட்டணங்களை நேற்று (13) நள்ளிரவு முதல் 60 சதவீதத்தால் அதிகரிக்க தீர்மானித்துள்ளதாக கொள்கலன் போக்குவரத்து சங்கம் தெரிவித்துள்ளது.

சரக்கு கொள்கலன் கட்டணம் உயர்த்தப்பட்டதால், இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலை மேலும் உயரும் என இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எரிபொருள் மானியம் அல்லது பஸ் கட்டண திருத்தம் தொடர்பிலான தீர்மானம் இன்று (14) இடம்பெறவுள்ள அமைச்சரவை கூட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானத்தின் பின்னர், அறிவிக்கப்படும் என, போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

எவ்வாறாயினும் ரயில் கட்டணத்தில் எந்த மாற்றமும் இருக்காது என்றும் இந்த திடீர் டீசல் விலை உயர்வு நாட்டின் போக்குவரத்து துறையில் நேரடி பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

கொரோனா தொற்று காரணமாக, 17% பஸ் கட்டண உயர்வை வழங்கியதையடுத்து, தனியார் பஸ் உரிமையாளர்கள் லாபத்துடன் தங்கள்

> **ரயில் கட்டணத்தில் எந்த மாற்றமும் இருக்காது. சரக்கு கொள்கலன் கட்டணங்களை 60 சதவீதத்தால் அதிகரிக்க தீர்மானித்துள்ளதாக கொள்கலன் போக்குவரத்து சங்கம் தெரிவித்துள்ளது. சரக்கு கொள்கலன் கட்டணம் உயர்த்தப்பட்டதால், இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலை மேலும் உயரும்**

சேவையைத் தொடர்ந்தனர் என்றும் டீசல் விலை ரூ. 50 க்கு மேல் அதிகரிக்கப்பட்டதே தற்போதைய பிரச்சினைக்குக் காரணம் என்றும் எரிபொருள் மானியம் வழங்குவதா அல்லது விலை திருத்தம் வழங்குவதா என்பது குறித்து நிதி அமைச்சருடன் பல சுற்று கலந்துரையாடல்கள் இடம்பெறும் எனவும் தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கங்களுடனான கலந்துரையாடல் இன்று (14) இடம்பெறவுள்ளதாகவும் தெரிவித்தார்.

எனவே, இந்த விலை திருத்தம் தொடர்பில் அமைச்சு அறிவிக்கும் வரை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கங்களுக்கு தமது சேவையை தொடருமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

அவை தொடராவிட்டாலும், பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கு பணிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

## முதலீட்டு வாய்ப்புகளை அழிக்கும்...

இலங்கையில் முதலீடு செய்ய வெளிநாட்டினரை அழைப்பதன் முக்கியத்துவம் குறித்தும் வலியுறுத்திய அவர், அரசியல்வாதிகள் ஆர்வமுள்ள தரப்பினரிடம் லஞ்சம் கோருவதால், இதுபோன்று பணம் அனுப்பப்படுவது குறைவடைவதாகத் தெரிவித்தார்.

புலம்பெயர்ந்தோரின் வருமான வழிகளை மீளக் கட்டியெழுப்புவதன் மூலம் அண்டை நாடுகளிடமிருந்து கடன் பெறுவதைத் தவிர்க்க முடியும் என்றார்.

## அரசாங்கத்துக்கு எதிரான

பொது மக்களின் தற்போதைய பிரச்சினைகளை ஜனாதிபதிக்கு தெரிவிப்பதிலும், அடுத்த மாதத்துக்குள் பிரச்சினைகளைத் தீர்க்குமாறு அரச தலைவருக்கு சவால் விடுப்பதிலுமே இந்த போராட்டம் கவனம் செலுத்தும் என அவர் வலியுறுத்தினார்.

இலங்கையின் எதிர்காலத்தை திட்டமிடுவதற்கு நிபுணர்கள் குழுவை வரவழைக்குமாறு அவர் அரசாங்கத்திடம் கேட்டுக்கொண்டார்.

ஜனாதிபதி தனது தீர்மானங்களை பிரதிபலிப்பதும் இன்னும் பல சிக்கல்களைத் தவிர்ப்பதற்கானமுன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பதும் முக்கியம் எனவும்

அவர்கள் திறமையான திட்டத்தை முன்வைத்தால், அரசாங்கத்துக்கு தனது ஆதரவை வழங்குவதாகவும் அவர் உறுதியளித்தார்.

## மின் கட்டணத்தை செலுத்தவில்லையா?

நான் ஒருபோதும் கொழும்பில் வசிக்கவில்லை. 2019 ஆம் ஆண்டு முதல் கடந்த அரசாங்கத்தின் போது நான் எனது உத்தியோகபூர்வ இல்லத்தை ஆக்கிரமிக்கவில்லை என்றும் உண்மையான நிலையை இலங்கை மின்சார சபைக்கு அறிவித்து கடிதம் எழுதியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ, தனது மின்சாரக் கட்டணத்தைச் செலுத்தத் தவறியதாக தொழிற்சங்கவாதி ஒருவர் முன்னர் குற்றஞ்சாட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அரசாங்கத்தை கைவிடாது 'கை'

எனினும், இரண்டோர் உறுப்பினர்கள் மட்டுமே அரசாங்கத்தில் இருந்து வெளியேற விரும்புவதாக அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அற்கமைய, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தொடர்ந்தும் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படும் என அக்கட்சி வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன.

இதேவேளை, அரசாங்க அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள், தம்மீது தாக்குதல் நடத்துவதை நிறுத்துமாறு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவுக்கும் இடையில் அண்மையில் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் இவ்வாறான தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவது ஐக்கியத்துக்கு பெரும் தடையாக இருப்பதாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## வரிசைகளுக்கு முடிவுகட்ட 7 மாதங்கள்...

எனவே, சுற்றுலாத்துறை மற்றும் ஏற்றுமதியை பலப்படுத்துவதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க ஜனாதிபதி முயற்சிக்கின்றார். தற்போதைய பிரச்சினைகளை சமாளிப்பதற்கு அரசாங்கத்துக்கு குறைந்தது ஏழு முதல் எட்டு மாதங்கள் எடுக்கும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## நிதியமைச்சர் பசிலுக்கு எதிராக நம்பிக்கையில்லா...

நிதியமைச்சர் பசில் ராஜபக்‌ஷவுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரப்படவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் கட்சிக்குள் ஏற்கெனவே கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்ப ட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

நாட்டில் நிலவும் நிதி நெருக்கடி மற்றும் அதன் நிர்வாகம் தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்காமை, நாட்டின் பொருளாதார நிலை குறித்து பாராளுமன்றத்துக்கு தெரிவிக்காமை மற்றும் பதிலளிக்காமை போன்ற காரணங்களை

> **நிதி நெருக்கடி மற்றும் அதன் நிர்வாகம் தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்காமை, பொருளாதார நிலை குறித்து பாராளுமன்றத்துக்கு தெரிவிக்காமை, பதிலளிக்காமை போன்ற காரணங்களால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது**

கருத்திற்கொண்டே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் பராளுமன்ற உறுப்பினர்கள் குழுவும் கட்சி முகாமைத்துவக் குழுவும் கலந்துரையாடி உடனடி நடவடிக்கை எடுப்பதாக அத்தநாயக்க மேலும் தெரிவித்தார்.

## பொருளாதார ஆலோசகர்களின் கருத்துகளை செவிமடுக்காததால் வந்த விளைவு

### எஸ். சிறிதரன் எம்.பி

யது பாஸ்கரன்

சரியான பொருளாதார ஆலோசகர்களின் கருத்துகளை இந்த அரசாங்கமும் ஜனாதிபதியும் கேட்காமல் இராணுவ பிரசன்னத்துடனும் இராணுவத் தளபதிகளை நியமனம் செய்து, தனது அமைச்சுகளை நடத்தியதன் விளைவு, இந்த நாடு அதளபாதாளத்துக்குள் போனது என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

கிளிநொச்சி உதயநகர் பகுதியில் இடம்பெற்ற பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கக் கோரி மக்களின் கையெழுத்து பெறும் நிகழ்வில் கலந்துகொண்ட பின்னர் ,ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்விடயத்தைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று இலங்கை அரசாங்கம் பல்வேறுபட்ட நெருக்கடிகளை நாட்டில் வாழ்கின்ற மக்களுக்குக் கொடுத்திருக்கின்ற இந்தச் சூழலில், மக்கள் அன்றாட சீவியங்களை நடாத்த முடியாதவர்களாக மாறியிருக்கின்றார்கள். எரிபொருட்களின் விலை உச்சத்தை தொட்டிருக்கின்றது. அன்றாட உணவு பொருட்கள் மக்களின் வாழ்வில் பெருத்த அடியை அடித்திருக்கின்றது.



எதிர்காலத்தில் இங்கு வாழ முடியுமான என இவையெல்லாம் மக்கள் மத்தியில் கேள்விக்கு உட்படுத்தியிருக்கின்றன.

இலங்கையின் திட்டமிடப்படாத செயற்பாடுகள் பாரிய பின்னடைவுக்குள் நாட்டை தள்ளியிருக்கின்றது. நாட்டின் பொருளாதாரத்தை சீராகக் கொண்டு செல்வதற்கு சர்வதேச நாணய நிதியத்துடன் பேசி ஒரு நிலைப்பாட்டுக்கு வாருங்கள் என கட்சி தலைவர்கள், நிபுணர்கள் பலரும் கோரியிருந்தனர்.

ஆனால் சர்வதேச நாணய நிதியத்தின் வாசல்களை தொடமாட்மோம்; அவர்களுடன் பேசமாட்டோம் என்று சொன்ன அரசாங்கம் இப்பொழுது சர்வதேச நாணய நிதியத்தின் கதவுகளை தட்டுகின்றார்கள் என்றார்.

ஜனாதிபதியுடன் திட்டமிட்ட வகையில் பேச்சுகள் இடம்பெறுமா என அவரிடம் வினவியபோது, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் கூறியது போன்று திட்டமிடப்பட்ட திகதியில் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை இடம்பெறும் சில கட்சிகளின் கருத்துகள் தொடர்பில் திரும்ப திரும்ப பதிலளித்து விரிசலையும் கருத்து முரண்பாட்டையும் தோற்றுவிக்க விரும்பவில்லை.

மக்களின் காணிகள் சுவீகரிக்கப்படுதல், வனலாகா திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம் ஆகியவற்றால் காணிகள் சுவீகரிக்கப்படுதல் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்த தினத்தில் ஜனாதிபதியுடன் பேசப்படும் என அவர் இதன்போது தெரிவித்தார்.

# மக்கள் புரட்சிக்கு தலைமை ஏற்கத் தயார்

## அநுரகுமார அறிவிப்பு



தற்போதைய ஆட்சியை விரட்டியடிக்க மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து முன்வருவார்களாக இருந்தால், அதற்கு தலைமை தாங்குவதற்கு தேசிய மக்கள் சக்தி தயாராக இருப்பதாக தெரிவித்த அக்கட்சியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி, சஜித் பிரேமதாஸவால் மாற்றத்தை ஏற்படுத்த முடியாதெனவும் தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரியில் நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் மாநாட்டில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், நாட்டு மக்களின் நம்பிக்கையை கடந்த 74 வருடங்களாக ஆட்சி செய்த ஆட்சியாளர்கள் இல்லாதொழித்துள்ளனர். எனினும் தேசிய மக்கள் சக்தி மீது நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் மக்கள் வைத்துள்ளனர். நாட்டில் ஆட்சிக்கு வரும் அனைத்து கட்சிகளும் தங்களது எதிர்க்கட்சிகளை பழிவாங்குவதையும் அதற்கு முன்னர் இருந்த அரசாங்கம் செய்த வேலைத்திட்டங்களை இல்லாதொழிப்பதையுமே செய்து, நாட்டை சூறையாடியுள்ளனர்.

அது மாத்திரமன்றி நாட்டின் வளங்களையும் வெளிநாடுகளுக்கு வழங்கி நாட்டு மக்களையும் கடனாளிகளாக மாற்றி இருக்கிறார்கள். இதனை மாற்ற வேண்டும். ஊழலற்ற, வீண் விரயமற்ற நேர்மையான நபர்களைக் கொண்ட ஆட்சியே நாட்டுக்கு இப்போது தேவைப்படுகிறது.

இந்த மாற்றத்தை ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவால் செய்ய முடியாது. காரணம், அவரின் அருகில் இருப்பவர்களும் ஊழல்வாதிகளே. நாட்டு மக்களை வதைக்கும் இந்த ஆட்சியை விரட்டியடிப்பதற்கு மக்கள் முன்வருவார்களாக இருந்தால் அதற்குத் தலைமை தாங்குவதற்கு தேசிய மக்கள் சக்தி தயாராக இருக்கிறது.

இந்த ஆட்சியை விரட்டியடிக்க மக்கள் அனைவரும் ஒன்று சேர வேண்டும். விலைவாசி அதிகரிப்பை உடன் நிறுத்தி மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும். எமது நாட்டின் வளங்களை வெளிநாட்டுக்கு விற்பதை உடனடியாக நிறுத்த வேண்டும் என்கிற கோரிக்கைகளை முன்வைத்து கொழும்பில் இம்மாதம் 18ஆம் திகதி பாரிய ஆர்பாட்டத்தை மேற்கொள்ள உள்ளதாகவும் தெரிவித்தார்.

விமல், கம்மன்பில பதவி நீக்கம்;

# அவசரப்பட்டு எதையும் செய்ய முடியாது

## என்கிறது சுதந்திரக் கட்சி

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையிலான கலந்துரையாடலின் போது சர்வக் கட்சி மாநாட்டை கூட்ட வேண்டுமென ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அக்கட்சியின் பொதுச்செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.



ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பொன்று இடம்பெற்றது. இதன்போது நாம் ஜனாதிபதியிடம் சென்று முழந்தாழிடவில்லை. மாறாக, நாட்டு மக்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் தொடர்பிலேயே கலந்துரையாடியிருந்தோம்.

மேலும் நாட்டின் தற்போதைய நிலையைக் கருத்திற்கொண்டு சர்வ கட்சி மாநாடு, நிபுணர்களின் மாநாடு, அனைத்து மதத் தலைவர்களுடனான மாநாடு என்பவற்றை கூட்ட வேண்டுமென ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளோம்.

அனைத்துக் கட்சி மாநாட்டை கூட்டுவதற்கான தினம் ஒன்றை ஜனாதிபதி திட்டமிடுவதாகவும், அனைத்துக் கட்சி மாநாட்டை கண்டிப்பாகக் கூட்ட வேண்டும் என இதன்போது ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினரிடம் ஜனாதிபதி உறுதியளித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில ஆகியோர் அமைச்சர் பதவிகளில் இருந்து பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் ஜனாதிபதியிடம் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி கவலையை வெளிப்படுத்தியதோடு, இது தொடர்பான எமது நிலைப்பாட்டை ஜனாதிபதிக்கு தெளிவாக எடுத்துரைத்துள்ளதாகவும் கூறினார்.

விமல், கம்மன்பில பதவி நீக்கம் செய்யப்பட்டமை தொடர்பில் அவசரமாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியால் எந்தவிதமான தீர்மானங்களையும் மேற்கொள்ள முடியாது. காரணம் எமது கட்சி நாட்டிலுள்ள பாரிய அரசியல் கட்சி. எங்களுக்கென 14 பாராளுமன்ற உறுப்பினர்கள், நாடுமுழுவதிலும் பாரியளவிலான எண்ணிக்கையில் தேசிய அமைப்பாளர்கள் இருக்கிறார்கள். இவர்களின் அனைவரும் ஒரே நிலைப்பாட்டில் இல்லை. எனவே இவர்களோடு கலந்துரையாடிய பின்னரே ஒரு தீர்மானத்துக்கு வர முடியும் எனவும் தெரிவித்தார்.







## பிக்குமாருக்குக் காணிக்கை...

நாராஹேன்பிட்டி அபயாராமாதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரரின் தாயாரான பொடி மெனிக்கே அம்மையாரை நினைவுகூர்ந்து, அபயாராம விகாரையில் இடம்பெற்ற பிக்குமாருக்கு காணிக்கை செலுத்தும் (சங்ககத தக்ஷினாவ) நிகழ்வில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கலந்துகொண்டதைப் படங்களில் காணலாம்.

நட்டத்தில் இயங்கும்

# பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களுக்கு போனஸ்

18,845 மில்லியன் ரூபாய் நட்டத்தில் இயங்கி வரும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம், அதன் அனைத்து ஊழியர்களுக்கும் அடுத்த மாதம் போனஸ் வழங்குவதற்கு தீர்மானித்துள்ளது.

கடந்த வாரம் நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்திலேயே மேற்கண்டவாறு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கடந்த வருடத்தில் மாத்திரம் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் ஊழியர்கள் அனைவருக்கும் மூன்று முறை போனஸ் வழங்குவதற்காக 156 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

மேலும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களுக்கு மேலதிக கொடுப்பனவுகளை வழங்குவதற்கு மாத்திரம் மாதமொன்றுக்கு 25 -30 கோடி ரூபாய் செலவிடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இனியும் ஆட்சியில் தொடர முடியாது



தற்போதைய அரசாங்கத்தால் இனியும் ஆட்சியில் தொடர முடியாதென தெரிவிக்கும் மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் டில்வின் சில்வா, முன்னொருபோதும் இல்லாதவகையில் நாடு நெருக்கடிக்குள் வீழ்ந்து கிடப்பதாகவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமைகளைக் தடுப்பதற்கு எடுத்திருக்க வேண்டிய எந்தவிதமான நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுக்கத் தவறியுள்ளது. கடந்த இரு வருடங்களாகக் காணப்பட்ட நெருக்கடி நிலைமை தற்போது மோசமானதாக மாறியுள்ளது. நாட்டின் வரலாற்றில் முன்னொருபோதும் இல்லாதவகையில் டொலாருக்கு நிகரான ரூபாயின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அல்லது நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் உத்தரவுகளால் பொருளாதாரத்தைக் கையாள முடியாது. இதற்கென ஒரு முறை இருக்கிறது. நாட்டின் வரலாற்றில் எரிபொருளின் விலைகளும் இதுபோல உச்சம் தொட்டதில்லை.

ரூபாயின் வீழ்ச்சியால் நாட்டில் அனைத்து பொருட்களின் விலைகளும் அதிகரித்துள்ளன. இதனால் நாட்டு மக்களால் வாழ முடியாத நிலையே ஏற்பட்டுள்ளது. இராஜாங்க அமைச்சர் கூறுகிறார் மருந்துப் பொருட்களின் விலைகள் 29 சதவீதத்தால் அதிகரிக்கும் என்று. ஆனால், உண்மையில் மருந்துப் பொருட்களின் விலைகள் இரட்டிப்பாக அதிகரித்துள்ளன.

நாட்டின் தற்போதைய உண்மையான நிலைமைகள் தொடர்பில் அரசாங்கம் நாட்டு மக்களுக்குக் கூறுவதில்லை. நாடு வங்குரோத்தை அடைந்துவிட்டதன் பின்னர், அத்தியாவசியமற்ற 367 பொருட்களுக்கு இறக்குமதி தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் மேலும் பல நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன. இதனால் சுய தொழில்கள் பல பாதிக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதிக்கு நாட்டு நிலைமைகள் தொடர்பில் புரிதல் இல்லை. நாட்டு மக்கள் படும் கஸ்டங்கள் பற்றியெல்லாம் அவருக்கு தெரியாது. பாடசாலை மாணவர்கள் சுற்றுலா சென்று வருவதுபோல, ஜனாதிபதி ஒவ்வொரு நிறுவனங்களுக்கும் சுற்றுப் பயணங்களை மேற்கொள்கிறார். புகைப்படம் எடுத்துக்கொள்கிறார். நாட்டின் நெருக்கடி நிலைமைகளுக்கு மத்தியில் ஜனாதிபதி மகிழ்ச்சியாக இருக்கிறார்.

தற்போதைய அரசாங்கம் ஆட்சி செய்வதற்கு மக்கள் வழங்கிய மக்கள் ஆணை முடிந்துவிட்டது. இனியும் தற்போதைய அரசாங்கம் ஆட்சியில் தொடர்வதற்கு உரிமை இல்லை.

எனவே அரசாங்கம் ஆட்சியில் இருந்து விலக வேண்டும். ஆனாலும் அரசாங்கம் ஆட்சியிலிருந்து விலகாது. எனவே மக்கள் ஒன்றிணைந்து, இந்த அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பிவிட்டு, மக்கள் ஆட்சியொன்றை நாட்டில் உருவாக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.



# கொழும்பில் இரவில் பட்டினி

நாட்டில் காணப்படும் காஸ் தட்டுப்பாடு காரணமாக வெளிமாவட்டங்களில் இருந்து வருகைதந்து மேல்மாகாணத்தில் கட்டட நிர்மாணப் பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்கள், வாடகைக்கு தங்கியிருப்போர், நாளாந்த உணவுகளை பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

**"வெளிமாவட்டங்களில் இருந்து வருகைதந்து மேல்மாகாணத்தில் கட்டட நிர்மாணப் பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்கள், வாடகைக்கு தங்கியிருப்போர், காஸ் தட்டுப்பாடு பிரச்சினைகளால் நாளாந்த உணவுகளை பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்**

காஸ் தட்டுப்பாடு பிரச்சினைகளால் மேல்மாகாணத்தில் உள்ள பெரும்பாலான ஹோட்டல்கள் மூடப்பட்டிருந்த நிலையில், தற்போது இரவில் மாத்திரம் ஹோட்டல்கள் மூடப்பட்டு வருகின்றன.

காஸ் பிரச்சினையால் வெளிமாட்டங்களில் இருந்து கொழும்பில் வேலை செய்யும் தொழிலாளர்களும் பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருகிறார்கள்.

# ஜனாதிபதி விடுத்துள்ள பணிப்புரை



புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தித் திட்டத்திற்காக இந்திய அதானி நிறுவனத்திடம் இருந்து 500 மில்லியன் டொலர் முதலீட்டை பெற அமைச்சரவை உபகுழு அனுமதியளித்துள்ளதாக ஆளுங்கட்சியின் பிரதம கொறடாவும், நெடுஞ்சாலைகள் அமைச்சருமான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 6 வருடங்களுக்குள் 5,000 மெகாவோட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலமாக உற்பத்தி செய்து தேசிய மின்கட்டமைப்புடன் சேர்க்குமாறு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கிடைக்கும் முதலீடுகள் தாமதிக்கப்படமாட்டாது எனவும், இந்த முதலீடுகளை தாமதப்படுத்த முயற்சிப்பவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரித்துள்ளார். புதிய வீடுகள் நிர்மாணித்தல், புதிய தொழிற்சாலைகள் அமைக்கப்படுவது போன்றவை காரணமாக வருடாந்தம் 5% முதல் 8% மின் தேவையை அதிகரிக்கிறது.

இந்தத் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

# அபிவிருத்தி வேலைத்திட்டங்களை ஒரு வருடத்துக்கு நிறுத்துக




நாட்டில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்களை ஒரு வருடத்துக்கு தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்க வேண்டுமென இலங்கை மத்திய வங்கி அரசாங்கத்துக்கு பரிந்துரைத்துள்ளது.

தற்போதைய அரசாங்கத்தின் தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றான ஒரு இலட்ச வேலைத்திட்டத்தையும் தற்காலிகமாக அரசாங்கம் இடைநிறுத்தி வைக்க வேண்டும் மத்திய வங்கி பரிந்துரைத்துள்ளது.

நாடு முகங்கொடுத்து வரும் நிதி நெருக்கடி நிலைமைகளைக் கருத்திற்கொண்டே மத்திய வங்கி இப்பரிந்துரைகளை வழங்கியுள்ளதாக மத்திய வங்கியின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

டொலருக்கு நிகரான இலங்கை ரூபாய் பாரதூரமான வகையில் வீழ்ச்சிடையந்து வரும் நிலையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்களை கண்டிப்பாக இடைநிறுத்தி வைக்க வேண்டுமெனவும், புதிய அபிவிருத்தி வேலைத்திட்டங்களைத் தற்காலிகமாக இடைநிறுத்தி வைப்பதால் நாட்டின் பொருளாதாரம் பெரிதாகப் பாதிக்கப்படாது எனவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

மத்திய வங்கி அரசாங்கத்துக்கு இப்பரிந்துரைகளை முன்வைப்பதற்கு முன்னதாக, பொருளாதாரம் தொடர்பான நிபுணர்களுடன் நீண்ட கலந்துரையாடலில் ஈடுபட்டதன் பின்னரே இத்தீர்மானத்தை எடுத்திருந்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் வெளிநாடுகளில் இருந்து சொகுசு வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு தடை விதிப்பதற்குப் பதிலாக, அவ்வாறு இறக்குமதி செய்யும்போது அதிகளவான சுங்க வரியைப் பெற்றக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மத்திய வங்கி அரசாங்கத்துக்கு மீண்டும் பரிந்துரைத்துள்ளது. இவ்வாறு செய்வதால் அரசாங்கத்துக்கு அதிகளவான வருமானம் கிடைக்கும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## தேவை

வெள்ளவத்தையில் உள்ள வீடொன்றுக்கு பிள்ளைகளைப் பார்த்துக் கொள்ளக்கூடிய, சமைக்க, சுத்தம் செய்யக்கூடிய வீட்டுப் பணிப் பெண் தேவை. 40 வயதுக்கு மேற்பட்டவராகவும், மாலை 5 மணி முதல் இரவு 9 மணி வரையில் வேலை செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும். தொடர்புகளுக்கு 0760326320

வெள்ளவத்தையில் உள்ள வீடொன்றுக்கு துணிகளை ஐர்ன் பண்ணக்கூடிய, சுத்தம் செய்யக்கூடிய வீட்டுப் பணிப் பெண் தேவை. 40 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும். வேலை நேரம் - காலை 7.30 தொடக்கம் நண்பகல் 12.30 வரையில். தொடர்புகளுக்கு 0760326320

மின்சார வேலியில் சிக்கி

# சிறுவர்கள் இருவர் பலி

## மின்சார வேலி அமைத்தவர் கைது

■ நூருள் ஹூதா உமர், கனகராசா சரவணன், பாறுக் ஷிஹான், எம்.சி. அன்சார்

சம்மாந்துறை பொலிஸ் பிரிவிலுள்ள நெய்னாகாடு கிராமத்தின் பட்டம்பிட்டிய எனும் பின்தங்கிய இடத்திலுள்ள தென்னந்தோப்பில் பொருத்தப்பட்டிருந்த யானை பாதுகாப்பு மின்சார வேலியில் சிக்குண்டு 13 வயதுடைய சிறுவர்கள் இருவர், நேற்று முன்தினம் (12) மதியம் உயிரிழந்தனர்.

குறித்த தென்னந்தோப்புக்கு வழமை போன்று விறகு சேகரிக்க சென்ற போது, றியாஸ் முஹம்மட் ஆசீக் (13 வயது) முஹம்மட் இப்றாஹிம் (13 வயது) ஆகிய சிறுவர்களே மின்சார வேலியில் சிக்குண்டு உயிரிழந்துள்ளனர்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த சம்மாந்துறை பொலிஸார், உயிரிழந்த சிறார்களின் சடலங்களை மீட்டு, பிரேத பரிசோதனைக்காக சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

இந்தச் சட்டவிரோத மின்சார வேலி அமைத்த 70 வயது நபரொருவரை கைது செய்துள்ளதாக சம்மாந்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் பண்ணை ஒன்றை நடத்திவரும் உரிமையாளரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.







## சுவேக்காவுக்கு கௌரவம்...

■ கனகராசா சரவணன்

மட்டக்களப்பு, வின்சன் தேசிய பாடசாலை மாணவி செல்வி பாக்கியராஜா சுவேக்காவுக்கு, அகில இலங்கை ரீதியில் சாரணர் இயக்கத்தில் ஜனாதிபதி விருதும் நினைவுச் சின்னமும் அண்மையில் வழங்கப்பட்டது.
இவற்றை, பிரான்ஸிகான இலங்கை தூதுவர் திருமதி கிஷினிக்கா ஹிரிபுருஹம வழங்கி, சுவேக்காவைக் கௌரவித்தார்.

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறிய

## வர்த்தகர்களுக்கு அபராதம்

■ எம்.எஸ்.எம். ஹனீபா

அம்பாறை மாவட்டத்தில் பெப்ரவரி மாதம் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறி, வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த வர்த்தகர்களுக்கு நீதிமன்றத்தால் 04 இலட்சத்து 12 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட புலனாய்வு உத்தியோகத்தர் கே.எம்.ஏ. றிஸ்லி, நேற்று (13) தெரிவித்தார்.

கூடுதலான விலைக்கு பொருள்கள் விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் செய்த முறைப்பாட்டையடுத்து அம்பாறை, தெஹியத்தக்கண்டி, பொத்துவில், அக்கரைப்பற்று, கல்முனை, சம்மாந்துறை ஆகிய பிரதேசங்களில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட பொறுப்பதிகாரி எஸ்.என்.எம். சாலிய பண்டார தலைமையில், பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் சுற்றி வளைப்புகளை மேற்கொண்டதாக தெரிவித்தார். பெப்ரவரி மாதம் மேற்கொள்ளப்பட்ட 63 சுற்றிவளைப்புகளில், 51 வர்த்தகர்களுக்கெதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டதாகவும், நீதிமன்றத்தால் 04 இலட்சத்து 12 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

வர்த்தக நிலையங்களில் விலைப்பட்டியலை காட்சிப்படுத்தாமை, கட்டுப்பாட்டு விலையை விட கூடுதல் விலைக்கு பொருட்களை விற்பனை செய்தல், நுகர்வுக்குப் பொருத்தமில்லாத பொருட்களை காட்சிப்படுத்தியமை, காலவதியான பொருட்கள், தரமற்ற பொருட்களை விற்பனை செய்து நுகர்வோரை ஏமாற்றுதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்ட வர்த்தகர்களுக்கெதிராகவும் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ததாகவும் கூறினார்.

மூன்று பிள்ளைகளின்

## தாயை காணவில்லை

■ நூருல் ஹூதா உமர்



சாய்ந்தமருது பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பொலிவேரியன் கிராமத்தில் வசித்து வந்த மூன்று பிள்ளைகளின் தாயான அப்துல் கபூர் பர்ஸானா (வயது 34) எனும் பெண்ணை, 2022.01.29ஆம் திகதி முதல் காணவில்லை.

காணாமல் போன அன்று அரிசி வாங்கி வருவதற்கென கடைக்குச் சென்ற அப்பெண், அக்கரைப்பற்றிலிருந்து கல்முனை நோக்கிச் சென்ற பஸ்ஸில் ஏறிச் சென்றதாக அவரை இறுதியாகக் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும், இரண்டு மாதங்களை அண்மித்தும் இன்னமும் அவர் வீடு திரும்பவில்லை என இவரது தந்தை அப்துல் கபூர் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

இப்பெண் தொடர்பாக சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கணவனை சிறிது நாள்களாக பிரிந்து வாழும் மனநோயாளியான இந்தத் தாயின் பிரிவால் தாய்ப்பால் கூட இல்லாமல் தாயினுடைய தாயின் பராமரிப்பில் உள்ள மூன்று மாத சிசு உட்பட குழந்தைகள் செய்வதறியாது திணறி வருகின்றனர்.

இந்த இளம் தாய் தொடர்பில் தகவல் அறிந்தவர்கள் அல்லது இவரை பார்த்தாலோ அல்லது இவரைப் பற்றி தகவல் அறிந்தாலோ அண்மையில் உள்ள பொலிஸ் நிலையம் ஊடாக சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்துக்கு அறியத்தருமாறு, அப்பெண்ணின் தந்தை, பொதுமக்களை கேட்டுக்கொள்கிறார்.

யாழ். மாவட்ட செயலகத்தின் தன்னிச்சையான

# செயற்பாடுகளை ஏற்க முடியாது

## சொல்வது ஒன்று; செய்வது ஒன்று. மாவட்டச் செயலகம் இன்று முற்றுகை

■ எஸ்.தில்லைநாதன்



மக்கள் நலன்கருதிய பிரதேச அபிவிருத்திகளை முன்னெடுக்கும் செயற்பாடுகளின் போது, யாழ். மாவட்டச் செயலகம் அவற்றைக் கட்டுப்படுத்தி, தனது தன்னிச்சையான செயற்பாடுகளை திணிக்க முயற்சிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாதென ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் சிவகுரு பாலகிருஸ்ணன் தெரிவித்தார்.

இதற்காக யாழ். மாவட்ட செயலகத்தை இன்று (14) முற்றுகையிட்டு கண்டனப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், "மக்களுக்கு அவசியமானதும் முன்னுரிமையிலானதுமான திட்டங்களை மக்களிடமிருந்து நேரடியாகப் பெற்று அவற்றை செய்து கொடுப்பதே தற்போதைய தேவையாக உள்ளது.

"ஆனால், யாழ் மாவட்ட அபிவிருத்திகளை பிரதேச ரீதியாக முன்னெடுக்கும்போது, அரசாங்கத்தால் ஏற்கெனவே வெளியிடப்பட்ட சுற்றுநிருபங்களை கணக்கில் கொள்ளாது, தன்னிச்சையான செயற்பாடுகளில் மாவட்ட செயலகம் ஈடுபட்டுவருவதால் மக்களின் அவசிய தேவைகள் புறக்கணிக்கப்படுவதை மக்கள் பிரதிநிதிகளான எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது.

"குறிப்பாக, பிரதேச சபையை மையப்படுத்திய அபிவிருத்தித் திட்டங்களில் மக்கள் பிரதிநிதிகள் முழுமையாகப் புறக்கணிக்கப்படும் நிலை யாழ். மாவட்டத்தில் மட்டும் காணப்படுகின்றது.

"அத்துடன், மக்களின் நலன்கள் அனைத்தும் மக்களின் விருப்புக்கமைவான தெரிவுகளாகவே இருக்க வேண்டும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கூறியுள்ளார். ஆனால், யாழ் மாவட்டத்தில் மாவட்டச் செயலகம் சொல்வது ஒன்று; செய்வது ஒன்றாகக் காணப்படுகின்றது" என்றார்.









## பொங்கல் உற்சவம் ஆரம்பம்...

கிளிநொச்சி மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற கோவில்களில் ஒன்றாக காணப்படுகின்ற கரைச்சி, புளியம்பொக்கணை நாகதம்பிரான் கோவில் வருடாந்த பங்குனி உத்தரப் பொங்கல் உற்சவம், கடந்த வெள்ளிக்கிழமை (11) ஆரம்பமாகியது.
இந்த உற்சவம் விளக்கு வைத்தல் பூசையுடன் ஆரம்பமாகி, பாரம்பரிய முறைப்படி பண்டமெடுத்து வருவதற்காக மாட்டு வண்டிகளில் பக்தர்கள், யாழ். புத்தூர், பண்டமரவடிக்கு சென்றனர்.
புளியம்பொக்கனை நாகதம்பிரான் கோவிலின் வருடாந்த பங்குனி உத்தர பொங்கல் விழா, எதிர்வரும் 18ஆம் திகதி நடைபெற உள்ளமை குறிப்பிடத்தக்கது.
(படங்கள்: எஸ். தில்லைநாதன்)

பலாலி பொலிஸ் நிலைய

## பொறுப்பதிகாரிக்கு திடீர் இடமாற்றம்

■ செந்தூரன் பிரதீபன்

பலாலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் சஞ்ஜீவவுக்கு, சேவை நிமித்தம் அம்பிலிப்பிட்டிய பொலிஸ் நிலையத்துக்கு திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஐந்து வருடங்களாக கடமையாற்றிய பிரதான பொலிஸ் பரிசோதகர் சஞ்சீவ, பொலிஸ்மா அதிபரின் உத்தரவுக்கமைய இடமாற்றம் பெற்றுள்ளார். பலாலி பொலிஸ் நிலையத்துக்கான புதிய பொறுப்பதிகாரி இதுவரை நியமிக்கப்படவில்லை என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

எரிபொருள் பற்றாக்குறையால்

## கடற்றொழில் கடும் பாதிப்பு

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

நாட்டில் நிலவுகின்ற எரிபொருள் பற்றாக்குறை காரணமாக, பெருமளவான தொழில் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

அதன்படி, கிளிநொச்சி, பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இரணைமாதா நகர், பள்ளிக்குடா, நாச்சிக்குடா, கிராஞ்சி, வேரவில், வலைப்பாடு போன்ற பகுதிகளில் கடற்றொழில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

தமது தொழில் நடவடிக்கைகளுக்காகச் சென்று வருவதற்குத் தேவையான எரிபொருள் இல்லாத நிலையில் தாங்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக அப்பகுதி மீனவர்கள் தெரிவிக்கின்றனர். எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட வரிசைகளில் காத்திருந்தும் மட்டுப்படுத்தப்பட்ட எரிபொருளை மாத்திரமே பெற்றுக்கொள்ள முடிவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

திராய்க்கேணியில்

## கேணி அமைக்க மக்கள் தீர்மானம்

■ சகா



அட்டாளைச்சேனைப் பிரிவிலுள்ள திராய்க்கேணி தமிழ்க் கிராமத்தில் கேணியில் மண் நிரப்பிய விவகாரத்துக்கு எதிர்ப்புத்தெரிவித்த பொதுமக்கள், அந்தஇடத்தை மீண்டும் தோண்டி, தீர்த்தக்கேணி அமைக்கவேண்டுமென தீர்மானம் எடுத்துள்ளனர்.

அத்தீர்மானத்தை பொதுமக்கள், எழுத்து வடிவில் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளரிடம் கையளித்துள்ளனர்.

அக்காணியில் சிறுவர் பூங்கா அமைப்பதற்கும் அருகிலுள்ள சலவைத் தொழிலாளர் கட்டடத்தை புனரமைத்துத்தரவுமே அக்காணியை மண்போட்டு நிரப்பியதாக அட்டாளைச்சேனை தவிசாளர் கூட்டத்தில் தெரிவித்திருந்தார்.

இருந்தபோதிலும் சிறுவர் பூங்கா அமைப்பதற்கு மக்கள் இணங்கவில்லை. மாறாக திராய்க்கேணியின் இருப்புக்கு காரணமாய் அமைந்த கேணியை மீண்டும் தோண்டி, தீர்த்தக்கேணி அமைக்க இணக்கம் தெரிவித்தனர்.

## வாய் சுகாதார பிரிவு திறந்துவைப்பு

■ ஏ.எல்.எம்.ஷினாஸ்

கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் வாய் சுகாதார பிரிவை திறந்து வைக்கும் நிகழ்வு, கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.ஆர்.எம். அஸ்மி தலைமையில், நேற்று (13) நடைபெற்றது.

பொதுமக்களுக்கு கல்முனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தால் வழங்கப்படும் சேவைகளை விஸ்தரிக்கும் நோக்கில் திறந்து வைக்கப்பட்டுள்ள இந்த சமூக வாய் சுகாதார பிரிவில் வாய் சுகாதார பரிசோதனைகள், சிகிச்சைகள் வழங்கப்படவுள்ளன.


இந்த நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஐ.எல். எம்.றியாஸ் பிரதம அதிதியாக கலந்துகொண்டு, வாய் சுகாதார பிரிவை திறந்து வைத்தார்.



வடக்கிலும் கிழக்கிலும்

## நீதிபதிகளுக்கு உடனடி இடமாற்றம்

■ செந்தூரன் பிரதீபன், எஸ்.தில்லைநாதன்



நாடளாவிய ரீதியில் 118 நீதிபதிகளுக்கு உடனடியாக அமலுக்கு வரும் வகையில் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக நீதிச் சேவை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் சன்ஜீவ சோமரத்தினவால் உரிய வகையில் இடமாற்ற கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 4ஆம் திகதியில் இருந்து இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் வடக்கு, கிழக்கில் உள்ள நீதவான் நீதிமன்ற நீதிபதிகளுக்கும் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

மல்லாகம் நீதிமன்றில் கடமையாற்றும் ஏ.ஜீ. அலெக்ஸ்ராஜா பருத்தித்துறை மாவட்ட நீதவான் நீதிமன்றுக்கு மாற்றம் பெற்றுள்ளார்.

மல்லாகம் நீதவான் நீதிமன்ற மேலதிக நீதவானாக கடமையாற்றிய ஆனந்தராஜா, யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றுக்கு மாற்றப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட நீதிவானாக கடமையாற்றும் ரீ.கருணாகரன், வாழைச்சேணை மாவட்ட நீதவானாகவும் மன்னார் மாவட்ட நீதவான் பீ.சிவகுமார், மல்லாகம் மாவட்ட நீதவானாகவும் இடமாற்றம் பெற்றுள்ளனர்.

அத்துடன், மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.சீ.றிஸ்வான், பொத்துவில் மாவட்ட நீதிபதியாகவும் வாழைச்சேணை மாவட்ட நீதிபதி எம். எம் பசீல், மட்டக்களப்பு மாவட்ட நீதிபதியாகவும் மாற்றப்பட்டனர்.

பருத்தித்துறை மாவட்ட நீதிபதி ஜீ.சைலயன், மல்லாகம் மாவட்ட மேலதிக நீதவானாகவும் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.பீற்றர் போல், மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றுக்கும் இடமாற்றப்பட்டனர்.

மேலும், பொத்துவில் மாவட்ட நீதிபதி எம்.எச்.எம்.ரவி, கண்டி நீதவான் நீதிமன்ற மேலதிக நீதவானாக இடமாற்றப்பட்டார்.



### ஹட்டனில் ஆங்காங்கே நிறுத்தி வைக்கப்பட்டும்

## ஓட்டோக்களை அப்புறப்படுத்த நடவடிக்கை

■ ரஞ்சித் ராஜபக்ஸ

ஹட்டன் நகர மத்தி மற்றும் நகரில் ஆங்காங்கே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் ஓட்டோக்களை அப்புறப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

ஹட்டன்- டிக்கோயா நகர சபையின் அனுமதியின்றி, நகரம் முழுவதும் ஓட்டோக்கள் நிறுத்தி வைக்கப்படுவதால், நகருக்கு ஏனைய வாகனங்களில் வருகை தருபவர்கள் மற்றும் சாதாரண மக்கள் என அனைவரும் பல சிரமங்களுக்கு முகம்கொடுப்பதுடன், கடும் வாகன நெரிசலும் ஏற்படுவதாக பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதுதொடர்பில் நகர வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைய, நகர சபையிடம் அனுமதி பெற்ற ஓட்டோக்களை மாத்திரம் நகரில் நிறுத்தி வைக்க ஹட்டன் போக்குவரத்து பொலிஸாரால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அனுமதிபெறாத ஓட்டோக்களை ஓட்டோ நிறுத்துவதற்கு என ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் நிறுத்துமாறும் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

இதற்கு எதிராக செயற்படும் ஓட்டோ உரிமையாளர்களுக்கு எதிராக நீதிமன்றம் ஊடாக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக ஹட்டன் பொலிஸ் போக்குவரத்து பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

### நிர்வாகத்தின் உறுதி மொழியை அடுத்து

# தொட்டலாகலை தோட்ட பிரச்சினைக்குத் தீர்வு

### என்கிறார் வடிவேல் சுரேஸ் எம்.பி

ஒரு மாத காலமாக நிலவிவந்த ஹப்புத்தளை- தொட்டலாகலை தோட்ட மக்களின் பிரச்சினைக்குத் தோட்ட நிர்வாகத்தினருடன் நடைபெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து, தீர்வு கிடைக்கப்பெற்றுள்ளது என, இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார்.



தொடர்ந்து தெரிவித்த அவர், தொட்டலாகலை தோட்ட நிர்வாகமானது, தோட்டத் தொழிலாளர்களின் வேலைநாள்களை குறைத்து, அடாவடி நிர்வாகத்தில் ஈடுபட்டதன் விளைவாக மக்கள் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டிருந்தார்கள்.

இதனையடுத்து, கடந்த மாதம் தானும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் உறுப்பினர்களும் பிரதேச மக்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டதுடன், இது தொடர்பில் ஹப்புத்தளை தொழில் ஆணையாளருக்கும் அறிவித்தித்தோம் என்றார்.

எனினும், தொடர்ந்து நிலவிய பிரச்சினையைத் தீர்க்கும் முகமாக, கடந்த பேச்சுவார்த்தையில் வழங்கப்பட்டிருந்த 14 நாள்கள் கால அவகாசத்தை தொடர்ந்து நேற்று முன்தினம் (12) தோட்ட மக்களையும் தோட்ட முகாமைத்துவ அதிகாரியையும் ஒரே இடத்திற்கு அழைத்து, நேருக்கு நேராக பேச்சுவார்த்தை நடத்தினோம்.

இந்தநிலையில், எம்மால் முன்வைக்கப்பட்ட 13 பிரச்சினைகளையும் கட்டம் கட்டமாக எதிர்வரும் புது வருடத்துக்கு முன்னதாகவே சீர் செய்ய நடவடிக்கை எடுப்பதாக தோட்ட முகாமையாளர் உறுதியளித்தார்.

மேலும் இனிவரும் காலங்களில் இத்தகைய பிரச்சினைகள் இடம்பெறாத வகையில், பெருந் தோட்ட நிர்வாகம், பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு இடையிலான சுமூகமான உறவைப் பேணுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என உறுதி அளித்ததை தொடர்ந்து, தொட்டலாகலை தோட்ட மக்களின் போராட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது என பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ் தெரிவித்தார்.




## 'பாரபட்சங்களை தகர்ப்போம்'

■ எஸ்.கணேசன்

ஹட்டன் சமூக நல நிறுவகத்தின் சர்வதேச மகளிர் தின நிகழ்வானது, 'பாரபட்சங்களை தகர்ப்போம்' என்ற தொனிப்பொருளின் கீழ் நேற்று (13) ஹட்டனில் நடைபெற்றது.

ஹட்டன் சமூக நல நிறுவகத்தின் பணிப்பாளர் அருட்தந்தை பிரேம்குமார் மற்றும் ஒருங்கிணைப்பாளர் சி.யோகித்தா ஆகியோரின் தலைமையில், ஹட்டன் ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது.

இதற்கான ஏற்பாடுகளை அட்டன் விடிவெள்ளி மகளிர் மன்றம் ஏற்பாடு செய்திருந்தது.

தொழிலாளர்களின் பிரச்சினைகள், அத்தியாவசிய பொருட்களுக்கான விலைவாசி அதிகரிப்பு, கல்வி தொடர்பான பிரச்சினைகள், சிறுவர், பெண்கள் உரிமைகள் போன்ற விடயங்கள் தொடர்பில் பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி பேரணியாகச் சென்றனர்.

ஹட்டன் சமூக நல நிறுவன காரியாலயத்திற்கு முன்பாக ஊர்வலம் ஆரம்பமாகி, ஹட்டன் ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலய மண்டபத்தை சென்றடைந்ததும் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

**“ தொழிலாளர்களின் பிரச்சினைகள், அத்தியாவசிய பொருட்களுக்கான விலைவாசி அதிகரிப்பு, கல்வி தொடர்பான பிரச்சினைகள், சிறுவர், பெண்கள் உரிமைகள் போன்ற விடயங்கள் தொடர்பில் பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி பேரணியாகச் சென்றனர்**

இந்த நிகழ்வில் பேராதெனிய பல்கலைகழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரும், மனித உரிமை மீறல்களுக்கான செயற்பாட்டாளருமான திருமதி.சோபனா தேவி, ஹட்டன் பொலிஸ் நிலையத்தின் பெண்கள் மற்றும் சிறுவர் பிரிவுக்கான பொறுப்பதிகாரி திருமதி. குமாரி விஜயசிங்க, ஹட்டன் கல்வி வலய பணிமனையின் ஆசிரிய ஆலோசகர் திருமதி ஏ.தமயந்தி, இலங்கை இயேசு சபையின் முதல்வர் டெக்ஸ்டர் கிரே உட்பட மலையக மகளிர் செயற்பாட்டாளர்களும் கலந்து கொண்டனர்.



### ஹோட்டல்கள், விடுதிகள் மூடப்பட்டதால்

## மரக்கறி உற்பத்தியாளர்களுக்கு பாதிப்பு

■ பி.கேதீஸ்

இந்த நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுபாடு மற்றும் சமையல் எரிவாயு நெருக்கடி காரணமாக, மரக்கறி உற்பத்தியாளர்களும் மரக்கறி வியாபாரிகளும் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என, அகில இலங்கை திறந்த பொருளாதார மத்திய நிலையங்களின் சங்கத்தின் தலைவர் அருண சாந்த ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

நுவரெலியா திறந்த பொருளாதார மத்திய நிலையத்தின் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது, அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து தெரிவித்த அவர், கடந்த வருடம் இரசாயன உரம், கிருமிநாசினி இறக்குமதி தடை செய்யப்பட்டதால் மரக்கறி உற்பத்தியில் பாரிய பாதிப்பு ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து டீசல், பெற்றோல், மண்ணெண்ணெய் தட்டுப்பாடும் இவர்களைப் பாதித்துள்ளது.

தற்பொழுது சமையல் எரிவாயு தட்டுப்பாடு காரணமாக பல ஹோட்டல்களும் சுற்றுலா விடுதிகளும் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

இதனால் சந்தைக்கு காய்கறிகளை கொள்வனவு செய்வதற்கு வருவதில்லை. அதேவேளை டீசல் தட்டுப்பாடு காரணமாகவும் வெளிமாவட்டங்களிலிருந்து மரக்கறிகளை கொள்வனவு செய்வதற்கு நுவரெலியா, கெப்படிபொல போன்ற இடங்களிலுள்ள திறந்த பொருளாதார மத்திய நிலையங்களுக்கு மரக்கறிகளை கொள்வனவு செய்வதற்கு லொறிகள் வருவதில்லை. இதனால் மரக்கறிகளின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதால் மரக்கறி உற்பத்தியாளர்களும் வியாபாரிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றார்.








## இலவச சேவைகள்...

லயன்ஸ் கிளப் International District 306 B2 சார்பில், பாரிய வேலைத்திட்டங்கள் மலையகத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன் முதலாவது நிகழ்வு புப்புரஸ்ஸ டெல்டா தமிழ் வித்தியாலயத்தில் 6ஆம் இலவச கண் பரிசோதனை, மூக்குக்கண்ணாடி வழங்கல், இலவச மருத்துவ முகாம், பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் என்பன வழங்கி வைக்கப்பட்டன. இதன் பிரதம அதிதியாக லயன் ஐ.கே. ராஜபக்ஷ மற்றும் அவரது மனைவி லயன் ஷிரானி ஆகியோர் கலந்துகொண்டனர்.



### காமன் கூத்தில் கலந்து கொண்டவர்கள்

## குளவிக் கொட்டுக்கு இலக்காகினர்

■ ராமு தனராஜா

ஹப்புத்தளை, கல்கந்த தோட்டத்தில் நடைபெற்ற காமன் கூத்து நிகழ்வில் கலந்துகொண்ட 11 பேரை, குளவிகள் கொட்டியுள்ளன.

நேற்று முன்தினம் இரவு (12) நடைபெற்ற கூத்தையடுத்து, நேற்று (13) காலை ஆற்றங்கரையில் நடைபெற்ற சம்பிரதாய பூஜையில் கலந்துகொண்டவர்களையே குளவிகள் கொட்டியுள்ளன. இதனையடுத்து, குளவிக்கொட்டுக்கு இலக்கான 11 பேர், அப்புத்தளை பங்கட்டி வைத்தியசாலையிலும் தியத்தலாவ வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.



### ஹட்டனில் நடைபெற்ற மலையக மக்களின் இயக்கத்தின்

## காணி உரிமைக்கான மகளிர் தின நிகழ்வுகள்

■ எஸ்.கணேசன்

மலையக மக்களின் காணி உரிமைக்கான இயக்கத்தின் சர்வதேச மகளிர் தின நிகழ்வு நேற்று முன்தினம் (12) ஹட்டனில் நடைபெற்றது.

'மலையக பெண்களின் வீடு மற்றும் வாழ்வாதாரத்திற்கான காணி உரிமையை உறுதி செய்வோம்' என்ற தொனிப்பொருளில் இந்த மகளிர் தின நிகழ்வு நடைபெற்றது.

'ஆயிரம் ரூபாய் சம்பளம் என்ற போர்வையில் நாங்கள் ஏமாற்றபட்டோம்', 'புலம் பெயர் தொழிலாளர்களுக்கு அரசு பொறுப்பு கூறலை உறுதிப்படுத்து', 'பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள பெண்களுக்கு நிவாரணத்தை பெற்றுக் கொடு', 'மலையக பெண்களின் வாழ்வாதாராத்தினை பெற்று கொடு' போன்ற வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்திய வண்ணம், சிவப்பு கொடிகளையும் ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி பேரணியாக சென்றனர்.

ஹட்டன் மல்லியப்பு சந்தியிலிருந்து ஊர்வலம் ஆரம்பமாகி, ஹட்டன் கிருஷ்ண பகவான் மண்டபத்தை சென்றடைந்ததும் நிகழ்வுகள் ஆரம்பமாகியன.

இதற்கான ஏற்பாடுகளை மலையக மக்களின் காணி உரிமைக்கான இயக்கத்தின் மகளிர் அணியினர் ஏற்பாடு செய்திருந்தனர்.

இந்த நிகழ்வில் மலையக மக்களின் காணி உரிமைக்கான இயக்கத்தின் பிரதான ஏற்பாட்டாளர் எஸ்.டி.கணேசலிங்கம், மகளிர் பிரிவிற்கான பொறுப்பளார் பி.புஷ்பலதா, பி. ரொஷானி, மொன்ரால் அமைப்பின் செயற்பட்டாளர் விமுக்தி த சில்வா, மலையக மகளிர் செயற்பாட்டாளர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது பெண்களின் கலை, கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றமை குறிப்பிடதக்கது.



## இ.தொ.காவின் மகளிர் தின விழா...





'பாலின சமத்துவம்' என்ற தொனிப்பொருளின் கீழ் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மகளிர் தின விழா, நேற்று (13) காலை கொட்டகலை ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலய கலாசார மண்டபத்தில் வெகு விமரிசையாக இடம்பெற்றது. இந்த விழா, கட்சியின் பிரதி தலைவியும் மகளிர் அணியின் பொறுப்பதிகாரியுமான அனுஷியா சிவராஜா தலைமையில் நடைபெற்றது. (எஸ். கணேசன்)

# அரசாங்கம் நன்மையடையும் கதவுகளை படிப்படியாகவே திறக்க வேண்டும்

‘ஆறு கடக்கும் வரைதான் அண்ணன், தம்பி; ஆறு கடந்த பின்னர், நீ யாரோ நான் யாரோ’ என்ற கதையாக, செவ்வாய்க்கிழமை (15) ஜனாதிபதியுடன் இடம்பெறவிருக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சந்திப்பும் அமைந்துவிடக்கூடாது.

ஏமாற்றுவதும் சந்தர்ப்பத்தைச் சாதமாகப் பயன்படுத்துவதும் அரசியலைப் பொறுத்தவரையில் இராஜதந்திரமாகப் பார்க்கப்படலாம். ஆனால், இன்னொரு தரப்பு தொடர்ந்து ஏமாந்து கொண்டோ, ஏமாற்றப்பட்டுக் கொண்டோ இருக்க முடியாது. தொடர்ந்தும் ஏமாற்றப்படும் தரப்பு, பட்டறிவில் இருந்து பாடங்கற்றுக் கொண்டு, அதற்கேற்றவாறான இராஜதந்திர அணுகுமுறைகளை வகுத்துக் கொள்ளவேண்டும்.

இலங்கை அரசாங்கம் தற்போது எதிர்நோக்கும் உள்நாட்டு, வெளிநாட்டு அழுத்தங்களைச் சமாளிக்கும் வகையிலான ஓர் அணுகுமுறையாகவே தமிழ்த் தேசிய கூட்டமைப்புடனான சந்திப்பை தமிழர் தரப்பு பார்க்கின்றது. குறிப்பாக, இந்தியாவிடம் இருந்து நிதியுதவியைப் பெற்றுக்கொள்ளும் முகமாகவே, இந்தச் சந்திப்புக்கு திகதி குறிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய பின்புலத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, எவ்வாறான அணுகுமுறையைப் பின்பற்ற வேண்டும்? இராஜதந்திர ரீதியில் வாய்ப்புகளை தமிழர் தரப்புக்கு சாதகமாக எவ்வாறு மாற்றிக்கொள்ள வேண்டும் போன்ற கேள்விகளுக்கு விடைகாணப்பட வேண்டும்.

ஏனெனில், ஜனாதிபதி கோட்டாபய, “தமிழருக்கு இனப்பிரச்சினை இல்லை; அவர்களுக்குப் பொருளாதார பிரச்சினையே இருக்கிறது” என்பதை பல்வேறு சந்தர்ப்பங்களிலும் வலியுறுத்தி வந்துள்ளார். இத்தகைய ஒருவருடன், தமிழர் தரப்பு எந்தப் புள்ளியில் இருந்து பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கப்போகின்றது? இருந்தபோதிலும், தமிழ் மக்களின் 15 அடிப்படைப் பிரச்சினைகளை கூட்டமைப்பு அடையாளப்படுத்தியுள்ளது.

பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்ற உறுதிமொழிகளை வழங்கிக்கொண்டே, பேச்சுவார்த்தைகள் தொடர்வதற்கு எச்சந்தர்ப்பத்திலும் இடங்கொடுக்கக்கூடாது. ஏனெனில், மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த 2009ஆம் ஆண்டு காலப் பகுதியில், “13ஆவது திருத்த சட்டத்துக்கு மேலாக சென்று, தீர்வை வழங்குவேன்” என்று கூறிக்கொண்டு, 18 சுற்று பேச்சுவார்த்தைகள் தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் நடைபெற்றிருந்தன. அதனால், தமிழர் தரப்பு ஏமாற்றப்பட்டதே மிச்சம்.

அரசாங்கம், நல்லெண்ணத்தடன் தமிழர் தரப்பை சந்திப்புக்கு அழைப்பதாக இருந்தால், உடனடியாகச் செய்யக் கூடிய, அரசியல் கைதிகளில் ஒரு தொகுதியினரை விடுதலை செய்தல், பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குதல், தொல்பொருள், வன இலாகா திணைக்களங்கள் ஊடாக முன்னெடுக்கப்படும் காணி அபகரிப்புகளை நிறுத்துதல் போன்றவற்றை சாட்டுப்போக்குகள் எதுவும் இன்றி செயற்படுத்தல் வேண்டும்.

குறுகிய காலத்திலும் நீண்ட காலத்திலும் அமல்படுத்தப்பட வேண்டியவை என வகைப்படுத்தப்பட்டு, குறுகிய காலத்தில் நிறைவேற்றப்பட வேண்டியவை எந்தவித காலதாமதமும் இன்றி நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்தவேண்டும்.

அடையாளப்படுத்தப்பட்ட 15 கோரிக்கைகளும் படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வரும்போதே, அரசாங்கம் நன்மையடையக் கூடியவாறான கதவைளையும், கூட்டமைப்பு திறந்து விட வேண்டும். அதற்கு முன்னர் அவசரப்பட்டு அரசாங்கம் நன்மையடையும் கதவுகளைத் திறந்துவிடுமானால், கிடைத்த சந்தர்ப்பத்தை தவறாகப் பயன்படுத்திய வரலாற்றுப் பழிச்சொல்லுக்கு, மீண்டும் கூட்டமைப்பு இலக்காவதைத் தவிர்க்க முடியாது.


தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

உறவினர்களிடம் மட்டுமே கரிசனை, அன்பைக் காட்டுதல் பூரணமான செயல் அல்ல! பேதமில்லாது, யாவரையும் தெளிவான நேயத்துடன் நோக்குவது இறைவனுக்குப் பிடித்தமானது. உலகம் பெரியதே ஆயினும், எமக்கு வீடுதான். இல்லத்துக்குள் ஏது பேதங்கள்?

ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில், யார் எவரிடத்திலும் உதவியைப் பெறாமல் வாழ்வதில்லை. மனிதர்கள் யார், எவர் என்றாலும் அவர்களின் உதவிகளும் எமக்குத் தேவையானதுதான்.

மனிதர்கள் எல்லோரும் ஒருவரில் ஒருவர் தங்கித்தான் வாழவேண்டும்; ஒதுக்கவும் முடியாது; ஒதுங்கவும் முடியாது. பிறரின் உதவி, ஒத்தாசை இன்றி, தனிமனிதனால் எதுவும் முடியாது. இயலுமான உதவிகளைப் பிறருக்குச் செய்யவேண்டும். சார்ந்து வாழ்வது உலக நியதி. ஆனால், எமது கருமங்களை பிறரிடம் திணிக்கக்கூடாது. எனவே, விலகி வாழ்வது முடியாத காரியம். உலகை நேசிப்பவர்கள், யாவரையும் ஒன்றாக நோக்குகின்றனர்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

ஒரே நாளில் சரிந்த ரூபாவின் பெறுமதி

# இலங்கையில் என்ன நடக்கிறது?




என்.கே. அஷோக்பரன்
Twitter: @nkashokbharan


ஐக்கிய அமெரிக்க டொலர் ஒன்று (\$1) 1997ஆம் ஆண்டு மார்ச் மாதமளவில், 60 ரூபாய்; 2022 மார்ச் 11இல் மத்திய வங்கியின் உத்தியோகபூர்வ விற்பனைவிலை 260 ரூபாய். 25 வருடங்களில், இலங்கை ரூபாய் கண்டுள்ள பெருவீழ்ச்சி இது.

இந்த 260 ரூபாய் என்பது, மத்திய வங்கியின் விலைதான். ஆனால், இந்த விலைக்குக் கூட டொலரை வாங்க முடியாத நிலைதான் சந்தையில் காணப்படுகிறது. இந்தப் பெருவீழ்ச்சியின் பெருமளவு, கடந்த இரண்டு ஆண்டுகளில் ஏற்பட்டிருக்கிறது என்பதும் கவனிக்கத்தக்கது. 2019 நவம்பரில் \$1, ஏறத்தாழ 180 ரூபாய். இரண்டு ஆண்டுகளுக்குள் இலங்கை ரூபாய் இத்தனை பெரும் சரிவைச் சந்தித்துள்ளது.

ஒரே நாளில் ஏறத்தாழ 200 ரூபாயிலிருந்து 260 ரூபாயாக டொலர் உயர்ந்த போது, எரிபொருள், கோதுமை மா, போக்குவரத்துச் சேவைகள் என எல்லாம் இரவோடிரவாக விலையேறியுள்ளன. இந்நிலையில், மக்கள் பலருக்கும் எழும் கேள்வி, டொலரின் பெறுமதி ஏன் கூடியது? ரூபாயின் பெறுமதி ஏன் குறைந்தது?

ஒரு பொருளின் விலை என்பது, அப்பொருளுக்கான கேள்வி, நிரம்பல் என்பவற்றில் தங்கியிருக்கிறது. எந்தவொரு பொருளுக்கும், அதற்கான வழங்கல் மாறாத நிலையில், கேள்வி அதிகரிக்கும் போது, அந்தப் பொருளின் விலை அதிகரிக்கும்.

இலங்கை தனது உற்பத்தியை ஏற்றுமதி செய்யும்போதும் டொலரில் பணம் செலுத்துவோருக்குத் தமது சேவைகளை வழங்கும் போதும் வெளிநாட்டிலிருந்து டொலர்கள் இலங்கைங்கு அனுப்பி வைக்கப்படும் போதும் வெளிநாட்டுக் கடன்களை டொலர்களில் பெற்றுக்கொள்ளும் போதும் டொலர்களை இலங்கை பெற்றுக்கொள்கிறது. இது டொலர் உட்பாய்ச்சலாகும்.

அதுபோல, இலங்கை தனக்குத் தேவையானவற்றை இறக்குமதி செய்யவும் கடன்களைத் திருப்பிச் செலுத்தவும் தன்னிடமுள்ள டொலர்களைப் பயன்படுத்துகிறது. இது டொலரின் வெளிப்பாய்ச்சலாகும். டொலரின் உட்பாய்ச்சலை விட, வெளிப்பாய்ச்சல் அதிகமாகவுள்ள போது, டொலருக்கான தட்டுப்பாடு ஏற்படுகிறது. மிகச் சுருக்கமாகச் சொன்னால், இதுதான் இலங்கைக்கு நடந்துள்ளது.

இலங்கையின் உற்பத்தித்துறை பெருமளவு விரிவடையவில்லை. ஏற்றுமதிகள் பெருமளவு விரிவடையவில்லை. அதேவேளை, அந்நியக் கடன்கள், இறக்குமதிகள் அதிகரித்த வண்ணமுள்ளன. இந்தநிலையில், அந்நியச் செலாவணி வருவாய்க்காக இலங்கை சுற்றுலாத்துறையில் அதிகம் தங்கியிருக்கிறது. கொவிட்-19 பெருந்தொற்றோடு, சுற்றுலாத்துறை உறைவடையவும், இலங்கைக்கான டொலர் உட்பாய்ச்சல் கணிசமாகக் குறைவடைந்தது.

இதுபோன்ற இக்கட்டான நிலையைச் சந்திக்கும் போது, மக்களின் நலனை முன்னிறுத்தி, அரசாங்கம் இயங்க வேண்டியது அவசியம். மத்திய வங்கி தன்னிடம் கையிருப்பிலுள்ள டொலரையும் தங்கத்தையும் கவனமாக முன்னுரிமை அடிப்படையில் பயன்படுத்த வேண்டும். அதற்கான கொள்கை முடிவுகளை சரியான முறையில், அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும். அதனை இந்த அரசாங்கம் செய்ததா என்றால், பல தகுதியுடைய பொருளியல் நிபுணர்களும் இல்லை என்ற பதிலைத்தான் சொல்கிறார்கள்.

கொவிட்-19 பெருந்தொற்றைத் தொடர்ந்து, இலங்கையில் அந்நியச் செலாவணி சிக்கல்நிலை உருவாகத் தொடங்கியபோது, இலங்கை அரசாங்கம் எடுத்த ஒரே நல்ல முடிவு, வாகன இறக்குமதியை நிறுத்தியதுதான். இலங்கையிலிருந்து அதிகளவில் டொலர் வெளிப்பாய்ச்சல் அடையும் வழிவகைகளில் வாகன இறக்குமதி முக்கியமானது. ஆனால், அதோடு சேர்த்து இரசாயன உர இறக்குமதியையும் அரசாங்கம் தடை செய்தமை, முட்டாள்தனமான முடிவாகும்.

ஏலவே உணவுக்காக இறக்குமதியில் பகுதியளவில் தங்கியுள்ளது இலங்கை. இந்தநிலையில், இரசாயன உரம் தடைசெய்யப்பட்டால், உணவு உற்பத்தி கணிசமாக வீழ்ச்சியடையும். ஆகவே, உணவு இறக்குமதிகளை இன்னும் அதிகரிக்க வேண்டியதாக இருக்கும். அது, மேலும் அந்நிய செலாவணி வெளியேற்றத்துக்கு வழிவகுக்கும். இதைப்பற்றியெல்லாம் யோசிக்காமல் எடுத்த முடிவு அது.

கையிருப்பிலுள்ள டொலரை, பொதுமக்களின் அத்தியாவசிய பொருள் இறக்குமதிக்குப் பயன்படுத்த வைத்துக்கொண்டு, கடன் மீளச்செலுத்துதல் தொடர்பில் கடன் வழங்குநர்களுடன் பேசி, கடன் மீளச்செலுத்தலை மறுகட்டமைப்புச் செய்துகொள்ளுதல்தான் உசிதமான முடிவாக இருந்திருக்கும்.

ஆனால், அதைச் செய்யாமல், ‘இலங்கை வாங்கிய கடனைக் கட்டாது விட்டுவிட்டது’ என்ற அவப்பெயர் வந்துவிடக்கூடாது என்ற வீம்பில், கையிருப்பிலுள்ள டொலர்களையும் தங்கத்தையும் கணிசமானளவில், கடன் மீளச்செலுத்தலுக்காக மத்திய வங்கி பயன்படுத்தியுள்ளது. இன்று கடன் மீளச்செலுத்தவும் போதியளவு கையிருப்பில்லை; அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதிக்கும் போதியளவு கையிருப்பில்லை.

ஆகவே, மீண்டும் உலக நாடுகளிடம் கையேந்தி நிற்கிறது இலங்கை. முட்டாள்தனம் என்பது ஆபத்தானது; ஆணவம் என்பதும் ஆபத்தானது. ஆனால், முட்டாள்தனமான ஆணவம் என்பது, நிச்சயம் அழிவுக்கே வழிவகுக்கக்கூடியது. அண்மைய மாதங்களில், இலங்கை ஆட்சியாளர்கள் மேற்கொண்ட பொருளாதார முடிவுகள், ‘முட்டாள்தனமான ஆணவத்தின்’ வெளிப்பாடு என்றால் மிகையல்ல.

சரி! குறைந்த பட்சம் யதார்த்தம் நேரடியாகப் புரியத்தக்க வகையில், சந்தைப் பெறுமதியில் டொலரை மிதக்க விட்டிருந்தால், ரூபாயின் வீழச்சியானது படிப்படியானதாக இருந்திருக்கும். ஆனால், ‘முட்டாள்தனமான ஆணவத்தின்’ விளைவாக, டொலரின் பெறுமதியைப் பலவந்தமாக ஏறத்தாழ 200-203 ரூபாய்களாக மிக நீண்டகாலத்துக்கு மத்திய வங்கி கட்டுப்படுத்தி வந்தது. இதன் விளைவாக, இலங்கைக்கு அந்நியச் செலாவணி அனுப்புபோவோரும் அனுப்பாத, அல்லது சட்டபூர்வமான முகாந்திரங்களினூடாக அனுப்பாத நிலையே ஏற்பட்டுள்ளது. இதனால் இலங்கையின் டொலர் உட்பாய்ச்சல் இன்னும் வீழ்ச்சி கண்டது.

மறுபுறத்தில், 2019இல் கோட்டா ஆட்சிக்கு வந்ததும், 2020இன் ஆரம்பத்தில் வரிச்சலுகைகள் பலவற்றை அவர் தலைமையிலான அரசாங்கம் வழங்கியது. இது அரசாங்கத்தின் வருவாயைக் கணிசமாகப் பாதித்தது. அப்போது பல தகுதியுடைய பொருளியல் நிபுணர்கள், இந்த முடிவு தவறானது என்பதைச் சுட்டிக்காட்டியிருந்தார்கள்.

இன்று அரசாங்கத்துக்குத் தனது செலவுகளைச் சமாளிக்க, போதிய வருவாயில்லை. மறுபுறத்தில், அரசாங்கம் பல நூறு பில்லியன்களை அச்சடித்து, புழக்கத்தில் விட்டுக்கொண்டிருக்கிறது. விளைவு ரூபாயின் பெறுமதி இன்னும் இன்னும் வீழ்ச்சி கண்டுகொண்டிருக்கிறது. இது நடக்கும் போதே, வட்டிவீதத்தையும் குறைவாகக் கட்டுப்படுத்தி வைத்துக்கொண்டிருக்கிறது மத்திய வங்கி.

தேசிய நுகர்வோர் விலைச்சுட்டியின் படி, தற்போது இலங்கையின் வருடாந்த பணவீக்கம் 16.8 சதவீதமாக இருக்கிறது. இன்றைய நிலையில், இலங்கை வங்கியின் சேமிப்புக்கான வட்டி வீதம், சாதாரண சேமிப்பு கணக்கிற்கு மூன்று சதவீதமாகவும், அதிகபட்சமாக ஐந்து வருட நிலையான வைப்புக்கு 9.25 சதவீதமாகவும் வட்டி வழங்குகிறது. சுருங்கக் கூறின், இன்றைய நிலையில் உங்களது பணத்தை சாதாரண சேமிப்பு கணக்கில் வைத்திருந்தால், அது வருடத்துக்கு 13.8 சதவீத மதிப்பை இழக்கிறது.

மறுபுறத்தில், டொலர் ஒரே நாளில் 203 லிருந்து 260 ஆக ஆனதில், தமது வாழ்நாள் சேமிப்பை ரூபாயாக சேமித்து வைத்திருந்தவர்களின் வாழ்நாள் சேமிப்பின் பெறுமதி, ஒரே நாளில் சரிந்துள்ளது. எவ்வளவு பெரிய கொடுமை! ‘முட்டாள்தனமான ஆணவம்’ மிக்க ஆட்சியாளர்களின் அக்கறையற்ற முடிவுகளால் ஏற்பட்ட நிலை இது.

இந்த நிலையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள, ஒரு ‘பொருளியல் சபை’யை ஜனாதிபதி கோட்டா ஸ்தாபித்துள்ளாராம். உடனே இது சுதேச மற்றும் சர்வதேச பொருளாதார நிபுணர்களைக் கொண்ட ஓர் ஆலோசனைச் சபை என்று நீங்கள் நினைத்தால், உங்களுக்கு ஏமாற்றமே!

இந்தச் சபையில் உள்ளவர்கள் யாரென்று பார்த்தால், கோட்டா, மஹிந்த, பசில் ஆகிய ராஜபக்ஷ சகோதரர்கள். இலங்கையின் இன்றைய இந்தப் பொருளாதார நிலையை ஏற்படுத்திய, பலமுடிவுகளை எடுத்த மத்திய வங்கி ஆளுநர் கப்ரால், அமைச்சர்களான பந்துல குணவர்த்தன, ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, மஹிந்தானந்த அளுத்கமகே, ரமேஷ் பத்திரன, ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத், திறைசேரியின் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகல, மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் தம்மிக்க நாணயக்கார ஆகியோராவர்.

இதில் ஆட்டில, நாணயக்கார ஆகியோர் பொருளியல் அறிவும் அனுபவமுமுள்ள மத்திய வங்கியாளர்கள். அமைச்சர் பந்துல குணவர்த்தன வெளிநாட்டு கற்கைகளுக்கான பீஜிங் பல்கலைக்கழகத்தில் சீன-இலங்கை பொருளாதார ஒத்துழைப்பு பற்றிய ஆய்வுக்காக முனைவர் பட்டம் பெற்றவர். ஆனால், மாதம் 2,500 ரூபாயில் ஒரு குடும்பம் சீவிக்க முடியும் என்ற அரும்பெரும் தத்துவத்தையும் சொன்னவர். இந்தச் சபையால் ஏதேனும் நன்மை விளையும் என்று நீங்கள் நம்புகிறீர்களா?

## கடிதங்கள்

சம்மாந்துறையில்

### யானைகள் அட்டகாசம்


அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை வீட்டுக் குடியிருப்புகளை நோக்கி ஊடுருவிய காட்டு யானைகளின் நடமாட்டத்தால் பிரதேசவாசிகள் அச்சமடைந்துள்ளனர். சம்மாந்துறை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சம்மாந்துறை மக்கள் குடியிருப்பு பிரதேசத்தில், யானைகளின் நடமாட்டத்தால் இரவு நேரங்களில் அச்சம் நிலவிவருவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். நேற்று (13) அதிகாலை ஊருக்குள் புகுந்த யானைகளின் அட்டகாசத்தால், வீட்டு மதில்கள், வாயிற்கதவு, பயிர்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளமை குறித்து ஊர்மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

யானைகளின் அட்டகாசத்தால், பிரதேச காணிகளில் உள்ள பயிர்கள் அதிகமாக சேதமாகி உள்ளதுடன், வீட்டில் தங்கியிருந்த மக்கள் தெய்வாதினமாக உயிர் தப்பியுள்ளனர். மேலும், இரவு வேளைகளில் ஊடுருவும் காட்டு யானைகள், அயலிலுள்ள காடுகளுக்குள் இருந்து குறித்த கிரமங்களுக்குள் வந்து, சேதம் விளைவித்துச் செல்வதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

யானைகள் கூட்டம், வீட்டு மதிலை உடைத்து சேதம் விளைவித்ததோடு, பயன்தரும் பயிர்களையும் மரங்களையும் கூட துவம்சம் செய்து சென்றுள்ளன. காட்டு யானைகள் ஏற்படுத்தும் சேதம் தொடர்பாக, கிராம சேவையாளரிடமும் பொலிஸாரிடமும் கிராம மக்கள் அறிவித்துள்ளனர்.

இனிமேலும், இவ்வாறு காட்டு யானைகள் ஊர்மனைக்குள் புகுந்து, வளங்களைச் சேதமாக்குவதையும் உயிருக்கு அச்சுறுத்தலாக இருப்பதையும் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது.

நூருல் ஹுதா உமர்



2021 இல்

# செலான் வங்கி வரிக்கு பின்னரான இலாபம் 4.6 பில்லியன்

செலான் வங்கி, 2021 டிசெம்பர் 31 திகதி முடிவடைந்த ஆண்டில் வரிக்குப் பின்னரான இலாபமாக (PAT) ரூ. 4.6 பில்லியனை பதிவு செய்துள்ளது, 2020 இல் 4.64% ஆக பதிவு செய்யப்பட்ட வங்கியின் தேறிய வட்டி வருமானம் (NII) பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட காலப் பகுதியில் குறிப்பிடத்தக்களவுக்கு 20.98% வளர்ச்சியடைந்ததன் விளைவாகவே வரிக்குப் பின்னரான இலாபம் உயர்வடைந்துள்ளது.

2021 ஆம் ஆண்டு நிலவிய மிகவும் சவால்மிக்கதான செயற்பாட்டுச் சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் வரிக்கு முன்னரான இலாபம் (PAT) கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 46.62% என்ற ஆரோக்கியமானதோர் அதிகரிப்புடன் ரூ. 6.0 பில்லியனாக பதிவு செய்யப்பட்டது. இதன் பெறுமதி 2020 இல் ரூபாய் 4.1 பில்லியனாக காணப்பட்டது. அதேபோன்று வங்கியின் வரிக்குப் பின்னரான இலாபமும் கடந்த நிதியாண்டில் பதிவு செய்யப்பட்ட ரூ. 3.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 52.11% அதிகரிப்புடன் ரூ. 4.6 பில்லியனாக பதிவு செய்யப்பட்டது.

பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட காலப்பகுதியில் வங்கியின் ஒட்டுமொத்த வட்டி வருமானம் ரூ. 4.3 பில்லியனால் குறைவடைந்து 2021 இல் ரூபா 46.8 பில்லியனாக பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும், இந்த நிதியாண்டுக்கான வட்டிச் செலவுகள் அதைவிட அதிகமான சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. அதன் பெறுபேறாக, 2020 இல் 4.64% வளர்ச்சியை பதிவு செய்திருந்த வங்கியின் தேறிய வட்டி வருமானம் (NII) பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட காலப் பகுதியில் குறிப்பிடத்தக்களவுக்கு 20.98% வளர்ச்சியடைந்தது.

வங்கியின் தேறிய வட்டி எல்லையில் 2021 ஆம் ஆண்டில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இதன்படி 2020 ஆம் ஆண்டில் பதிவாகிய 3.63% தேறிய வட்டி எல்லையுடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டு இது 4.05% ஆக முன்னேறியுள்ளது. வங்கியின் சொத்துகள், பொறுப்புகளை உரிய நேரத்தில் மீள்விலையிடல் செய்தமையும் அதேபோன்று வங்கி தனது நடைமுறைக் கணக்கு, சேமிப்புக் கணக்கு தளத்தை தொடர்ச்சியாக பலப்படுத்தி வந்தமையும் இதற்குக் காரணமாக அமைந்தது.

வங்கியின் தேறிய கட்டண மற்றும் தரகு வருமானம் கடந்த நிதியாண்டின் ரூ. 3.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021 இல் ரூ. 4.6 பில்லியனாக 24.44% அதிகரித்ததன் மூலம் குறிப்பிடத்தக்க வளர்ச்சியொன்றை பதிவு செய்துள்ளது. உத்தரவாதங்கள்,



வழங்கல் கட்டணங்கள், வணிகம்சார் கட்டணங்கள் அதேபோன்று கடன்கள் மற்றும் அட்டைகள் மீதான கட்டண வருமானம் ஆகியவற்றில் ஏற்பட்ட அதிகரிப்பே தேறிய கட்டண மற்றும் தரகு வருமானம் அதிகரிப்பதற்கு பிரதானமாக வழிவகுத்தது.

2021 இல் வங்கியின் மொத்த தொழிற்பாட்டு வருமானம் ரூ. 31.4 பில்லியனாக பதிவு செய்யப்பட்டுள்ளது. கடந்த நிதியாண்டில் பெற்றுக் கொண்ட ரூ. 25.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் இது 23.71% அதிகரிப்பாக காணப்படுகின்றது.

வங்கியின் வர்த்தக நடவடிக்கைகளில் இருந்தான தேறிய வருவாய் 163.02% இனால் குறைவடைந்ததுடன், பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட காலப் பகுதியில் 'முதல்நிலை நிதி ஆவணங்கள்' மற்றும் அரச பிணையங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட விலைச் சீராக்க நட்டங்கள் இதில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட காலப் பகுதியில் நிதிச் சொத்துக்கள் மீதான தேறிய 'அங்கிகார நீக்க வருவாய்கள்' 29.28% பாதகமானதொரு வளர்ச்சியை பதிவு செய்துள்ளது. வங்கியின் ஏனைய தொழிற்பாட்டு வருமானமானது 2021 இல் ரூ. 2,877.6 மில்லியனாக பதிவு செய்யப்பட்டது. இது கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 172.04% அதிகரிப்பாக காணப்படுகின்றது.

2020ஆம் ஆண்டு ரூ. 12.8 பில்லியனாக காணப்பட்ட வங்கியின் ஒட்டுமொத்த தொழிற்பாட்டுச் செலவானது பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட காலப் பகுதியில் ரூ. 13.1 பில்லியனாக 2.15% இனால் அதிகரித்துள்ளது. வங்கியின் ஆளணிச் செலவுகள் முன்னைய வருடத்தின் ரூ. 7.2 பில்லியனில் இருந்து 2021 இல் ரூ. 7.3 பில்லியனாக சிறிதளவில் 0.15% இனால் அதிகரித்துள்ளது.

நிறுவனச் செலவுகளில் ஏற்பட்ட மிதமானதோர் அதிகரிப்பு பாராட்டத்தக்கதாகும். இவ்வருட காலப்பகுதியில் ஒப்பீட்டளவில் விரைவான அளவுசார் வளர்ச்சியை இது தந்துள்ளது. பணிப்பாய்வு கட்டமைப்பை நடைமுறைப்படுத்தல், ரோபோ செயன்முறை தன்னியக்கமாக்கல், வியாபாரச் செயன்முறைகளை மீளமைத்தல், பரிவர்த்தனைகளை டிஜிட்டல் தளமேடைகளுக்கு நகர்த்துதல் போன்ற செயற்றிறன் மேம்படுத்தல் முன்னெடுப்புகள், செயன்முறைசார் மேம்படுத்தல்கள் ஆகியவற்றை பிரதிபலிப்பதாக இது காணப்படுகின்றது.

2020ஆம் ஆண்டு ரூ. 5.5 பில்லியனாக பதிவு செய்யப்பட்டிருந்த நிறுவனச் செலவுகள் இதன் பலனாக, 2021 இல் ரூ. 5.8 பில்லியனாக அதிகரித்துள்ளது. எவ்வாறிருப்பினும், வங்கியானது செலவைக் குறைப்பதிலும் செயன்முறைகளை நெறிப்படுத்துவதிலும் தொடர்ந்தும் கூடிய கவனம் செலுத்தி வருகின்றது.

2021 இல் மதிப்பிறக்க கட்டணங்கள் ரூ. 10.4 பில்லியனாக பதிவு செய்யப்பட்டுள்ளது. 2020 இல் பதிவு செய்யப்பட்ட ரூ. 7.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் இது 49.03% அதிகரிப்பாகும். பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிதியாண்டில், தனிப்பட்ட முறையில் குறிப்பிடத்தக்க கடன்கள் விமர்சன ரீதியாக மதிப்பிடப்பட்டு, பொருத்தமான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. அவர்களுள் சில வாடிக்கையாளர்கள் கடன்சலுகைக் காலத்தினை அனுபவித்துக் கொண்டிருந்த போதிலும் கூட வங்கி இதனை மேற்கொண்டது.

முன்னைய நிதியாண்டில் ரூ. 1.5 பில்லியனாக காணப்பட்ட வங்கியின் பெறுமதிசேர் நிதியியல் சேவைகள் மீதான வரி 2021 இல் 26.60% இனால் அதிகரித்து ரூ. 1.9 பில்லியனாக பதிவு செய்யப்பட்டது. 2021 ஆம் நிதியாண்டுக்கான வருமான வரியாக ரூ. 1.4 பில்லியனை வங்கி பதிவு செய்துள்ளது. 2020 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட ரூ. 1.1 பில்லியன் வருமான வரியுடன் ஒப்பிடுகையில் இது 31.57% அதிகரிப்பாக காணப்படுகின்றது.

2021 இல் நிலவிய மிகவும் சவால்மிக்கதான தொழிற்பாட்டுச் சூழ்நிலைகளுக்கு மத்தியில், செலான் வங்கி வரிக்கு முன்னரான இலாபமாக (PAT) ரூ. 6.0 பில்லியனை பதிவு செய்துள்ளது. கடந்த 2020ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ரூ. 4.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில் இது 46.62% ஆரோக்கிமானதொரு வளர்ச்சியாகும். அதுபோலவே, முன்னைய நிதியாண்டில் ரூ. 3.0 பில்லியனாக பதிவு செய்யப்பட்டிருந்த வரிக்குப் பின்னரான இலாபமும் (PAT) 2021 இல் ரூ. 4.6 பில்லியனாக அதிகரித்துள்ளதன் மூலம் 52.11% வளர்ச்சியை பதிவு செய்திருக்கின்றது.

# AFI Corp – IWill உடன் கைகோர்ப்பு

AFI Corp, தொழில்நுட்ப தீர்வுகளை வழங்கும் IWill உடன் கைகோர்த்துள்ளதாக அறிவித்துள்ளது. தனிநபர்களின் மனச்சோர்வு, பதட்டம், பிற மனநல சவால்களை முறியடிப்பதற்கும், தனிநபர்கள் மற்றும் தொழில் வல்லுநர்களாகவும் தங்களின் உயர்மட்ட சுய அடையாளத்தை அடைய அவர்களுக்கு உதவுவதற்காக நிபுணர்களால் வடிவமைக்கப்பட்ட சிகிச்சைக்கான உயர்தர தளமாகவும் அமைந்துள்ளது.

IWill என்பது IWill செயலி (Android & iOS) மூலம் ஒன்லைனில் கிடைக்கும் முழுமையான மன மற்றும் உணர்ச்சிப் பாதுகாப்பு அமைப்பாகும். இது சிறப்பு சிகிச்சை திட்டங்கள் மற்றும் அமர்வுகள், மனநல வகுப்புகள், மதிப்பீடுகள், பிற கருவிகளை உள்ளடக்கியது. IWill செயலியில் 98% வெற்றி விகிதம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் ஏற்பட்ட கடுமையான வாழ்க்கை மாற்றம் பெரும் அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. பல சூழ்நிலைகளில் இந்த அழுத்தம் மனச்சோர்வு, பதட்டம், கோபம், விரக்தி, பயம் ஆகியவற்றின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது. இது உற்பத்தித்திறன் மற்றும் வாழ்க்கையில் பொதுவான



திருப்தியைக் கணிசமாகக் குறைத்துள்ளது.

AFI Corp இன் வர்த்தக அபிவிருத்தி முகாமையாளர் சச்சின் முனசிங்க கூறுகையில், "IWill ஒரு செயலி மூலம் வழங்கப்படுகின்றது, பயனர்களுக்கு வசதியாகவும் தனிப்பயனாக்கப்பட்ட அணுகலையும் வழங்குவது மட்டுமல்லாமல், அவர்களின் வீட்டின் வசதியில் அவர்களுக்குத் தேவையான ஆதரவை வழங்குவது மட்டுமல்லாமல், களங்கத்தை சமாளிக்க வேண்டியதில்லை. அவர்கள் செய்ய வேண்டியதெல்லாம், செயலியைப் பதிவிறக்குவது, மதிப்பீட்டை எடுத்துக்கொள்வது, அவர்களின் IWill பயணம் தொடங்குகின்றது. IWill ஐ இலங்கையில் அண்மையில் அறிமுகப்படுத்தியதில் இருந்து, Assette software Pvt. Ltd மற்றும் Future Fibres Pvt. Ltd இன் உத்தியோகபூர்வ ஊழியர் நல்வாழ்வு பங்காளராக AFI Corp - IWill Sri Lanka நிறுவனத்தை அறிவிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம். Assette மென்பொருள் என்பது ஒரு நம்பகமான தரவு மூலத்திலிருந்து உருவாக்கப்பட்டதாகும். விற்பனை மற்றும் இணையத் தகவல்தொடர்புகளை உருவாக்குதல், மதிப்பாய்வு செய்தல் மற்றும் வழங்குதல் ஆகியவற்றை தானியங்குபடுத்தும் நிறுவனமாகும்.

Future Fibres நிறுவனம் தனது உற்பத்தி நடவடிக்கைகளை இலங்கையின் பியகமவை மையமாகக் கொண்டுள்ளதுடன், விற்பனை, வடிவமைப்பு, ஆராய்ச்சி, அபிவிருத்தி மையங்களை வெலன்சியாவில் நிறுவியுள்ளது. "மக்கள் எங்கள் வணிகத்தின் இதயத்தைப் போன்றவர்கள். மேலும் Future Fibres குடும்பத்தின் ஒருங்கிணைந்த பகுதியாக உள்ளது. Future Fibres இன் அங்கமான நாம், நமது ஊழியர்களுக்கு மனநலம் மற்றும் நல்வாழ்வில் ஆதரவளிக்க தொடர்ந்து முயற்சி செய்து வருகின்றோம்" என நாட்டிற்கான பணிப்பாளரும் Future Fibres இன் இயக்குநருமான ஹரதிச ரஜாபக்ஷ கூறினார்.

நிறுவனங்கள், தனிநபர்களுக்குமான தரமான, கொள்வனவு தகுதிக்கேற்ற மனநல ஆதரவை வழங்குவதன் மூலம், இலங்கையில் மனநலம் சார்ந்த இடத்தை மாற்றியமைக்கக்கூடிய யதார்த்தமாகக் கருதுவதாக IWill Sri Lanka நம்புகின்றது.

லடாக்

# பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண இந்தியா–சீனா முடிவு

லடாக்கின் சில பகுதிகளில் இந்தியாவும் சீனாவும் சுமார் 50, 000 க்கும் மேற்பட்ட வீரர்களை ஆயுதங்களுடன் நிறுத்தி வைத்துள்ளதால் அங்கு பதற்ற நிலை நிலவி வருகின்றது.

இந்நிலையில் லடாக்கின் எல்லைக் கட்டுப்பாடு பகுதியில் உள்ள இந்திய மற்றும் சீனாவின் படையினர்களுக்கு இடையிலான முரண்பாடுகளைப் பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காண இரு தரப்பினரும் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

கடந்த 11 ம் திகதி இந்தியா-சீனா இராணுவத் தளபதிகள் மட்டத்திலான 15ஆவது சுற்றுப் பேச்சுவார்த்தையில் பெரிய அளவுக்கு முன்னேற்றம் ஏதுமில்லை என்ற போதும்



பேச்சுவார்த்தையைத் தொடர இருதரப்பினரும் சம்மதம் தெரிவித்தனர். இது குறித்த கூட்டறிக்கை ஒன்று நேற்று முன்தினம் (12) வெளியானது.

இதில் இருதரப்பினராலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வை எட்டும் வரை பேச்சுவார்த்தை தொடரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உத்தரப் பிரதேசம்

# பா.ஜ.க வெற்றி பெற்றதால் மூவர் உயிரிழப்பு?

உத்தரப் பிரதேசத்தில் நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலில் பாரதிய ஜனதா கட்சி பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றது.



மேலும் பா.ஜ.கவை எதிர்த்து போட்டியிட்ட அகிலேஷ் யாதவ்வின் 'சமாஜ்வாடி கட்சியானது' எதிர்க்கட்சி அந்தஸ்தை பெற்றது.

இந்நிலையில் பா.ஜ.கவின் வெற்றியால் மனமுடைந்த மூன்று சகோதரர்கள் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டதாக சமூக வலைதளங்களில் புகைப்படம் ஒன்று வைரலாகி வருகின்றது.

இதனையடுத்து இது குறித்து அதிகாரிகள் மேற்கொண்ட விசாரணையில் இச்செய்தியானது உண்மையில்லை எனத் தெரியவந்துள்ளது.

மேலும், இப் புகைப்படங்கள் கடந்த 2020ஆம் ஆண்டு எடுக்கப்பட்டவை எனவும், இறந்தவர்களுக்கும் உத்தரப்பிரதேச அரசியல் கட்சிகளுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை எனவும் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் இதுபோன்ற பொய்யான செய்திகளைப் பரப்புபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

திருப்பூர்

# ஆணின் சடலத்துடன் ரயிலில் பயணித்த இளைஞர்கள்

கம்பளி போர்த்தியபடி ஆண் ஒருவரின் சடலத்துடன் இளைஞர்கள் சிலர் ரயிலில் பயணித்த சம்பவம் திருப்பூர் ரயில் நிலையத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



அசாம் மாநிலத்தில் கடந்த 9 ஆம் திகதி இருந்து திருப்பூர் ரயில் நிலையத்திற்கு வருகை தந்த ரயிலிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவ தினத்தன்று வட மாநிலத்தைச் சேர்ந்த இளைஞர்கள் சிலர் திருப்பூர் ரயில் நிலையத்தில் கம்பளி போர்த்தியபடி நபர் ஒருவருடன் ரயிலில் இருந்து இறங்கியுள்ளனர்.

இந்நிலையில் சந்தேகத்துக்குரிய வகையில் குறித்த இளைஞர்கள் நடந்து கொள்வதை சிசிடிவி கெமரா மூலம் பார்த்த பொலிஸ் அதிகாரிகள், அவர்களை விசாரணை செய்ததில் குறித்த நபரின் பெயர் அர்பிந்த்ராய் (வயது 30) என்பதும் அவர் பெங்களூருவில் காவலாளியாக வேலை செய்து வந்தார் என்பதும் தெரிய வந்தது.

மேலும் அவர் இறங்க வேண்டிய இடம் வந்ததும் அவரை அருகில் இருந்தவர்கள் எழுப்பியுள்ளனர் எனவும் ஆனால் அவர் உயிரிழந்த நிலையில் இருந்துள்ளார் எனவும் கூறப்படுகின்றது.

இதனால் அதிர்ச்சி அடைந்த அவர்கள் அவரின் அலைபேசி மூலம் அவரது உறவினர்களுக்குத் தகவல் தெரிவித்துள்ளனர் எனவும், இதனைத் தொடர்ந்து அவரது உறவினர்கள் சடலத்தை திருப்பூர் ரயில் நிலையத்தில் இறக்கி வைக்கும் படியும், தாங்கள் வந்து எடுத்துக்கொள்வதாகக் கூறியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாகவே இளைஞர்கள் அர்பிந்த்ராயின் சடலத்தை எடுத்து வந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்துக் குறித்த இளைஞர்களிடமிருந்து சடலம் மீட்கப்பட்டு ரயில்வே பொலிஸார், திருப்பூர் அரச மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இந்நிலையில் ரயிலில் சடலம் கொண்டுவரப்பட்ட சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

அசாம்

# சிறுவனைக் கொலை செய்த நபரை உயிருடன் எரித்த மக்கள்

ஐந்து வயதுச் சிறுவனைக் கொலை செய்த மனநலம் பாதிக்கப்பட்ட நபரை அப்பகுதியைச் சேர்ந்த மக்கள் தீயிட்டு உயிருடன் எரித்துக் கொலைசெய்தனர்.



அசாம் மாநிலத்தைச் சேர்ந்த உஜ்ஜல் முரா என்ற சிறுவன் நண்பர்களுடன் விளையாடிக் கொண்டிருந்த போது, மனநலம் பாதிக்கப்பட்ட நபரொருவர் சிறுவனொருவனைக் கழுத்தறுத்துக் கொலை செய்துள்ளான்.

இதை அறிந்த உள்ளூரைச் சேர்ந்த தேயிலை தோட்ட தொழிலாளர்கள், மனநலம் பாதிக்கப்பட்ட நபரை உயிருடன் எரித்துக் கொலை செய்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



பீகார்

# மருந்து கடைகளுக்குத் தீ வைத்த மருத்துவ மாணவர்கள்

மருந்துக் கடைகளுக்கு மருத்துவ மாணவர்கள் தீ வைத்த சம்பவம் பீகாரில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பீகார் மாநிலம் தர்பங்கா நகரில் உள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் மருந்துக் கடை விற்பனையாளர்களுக்கும், மருத்துவ கல்லூரி மாணவர்களுக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதம் முற்றிய நிலையில் கடந்த 12 ஆம் திகதி அதிகாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது அங்கிருந்த 4 கடைகள் மீதும், மருத்துவ மாணவர்கள் சிலர் பெட்ரோல் ஊற்றி தீ வைத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவத்தில் மருத்துவ கடை ஊழியர் ஒருவர் கத்திக் குத்துக்கு இலக்காகியுள்ளார் எனவும், மூன்று பொலிஸார் காயமடைந்துள்ளனர் எனவும் கடைகள் மற்றும் வாகனங்கள் பல சேதமடைந்துள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து அங்கு திரண்ட மருந்து விற்பனையாளர் வர்த்தக சங்கத்தினர் போராட்டத்தில் ஈடுபட்டதாகவும் இதனால் அங்கு பொலிஸார் குவிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இம்மோதலில் ஈடுபட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடலூர்

# ஆழ்ந்து உறங்கிய பொலிஸார்; தப்பியோடிய ஆயுள் தண்டனைக் கைதி

பொலிஸார் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தபோது, ஆயுள் தண்டனைக் கைதியொருவர் தப்பியோடிய சம்பவம் கடலூரில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.




திண்டுக்கல் மாவட்டத்தை சேர்ந்த முருகவேல் என்பவரே இவ்வாறு தப்பிச்சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொலைக்குற்ற வழக்கில் ஆயுள் தண்டனைக் கைதியாக கடலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்த குறித்த நபர், கரூர் பொலிஸ் நிலையத்தில் பதியப்பட்டுள்ள வழக்கு ஒன்றின் விசாரணைக்காக அரவக்குறிச்சிக்கு அழைத்து வரப்பட்டுள்ளார்.

அங்கு அவரை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி விட்டு அரச பஸ்ஸில் மீண்டும் கடலூருக்குப் பொலிஸார் அழைத்துச் சென்றுள்ளனர் போது நள்ளிரவு 2 மணியளவில் தியாகதுருகம் பகுதியில் அவர் தப்பியோடியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில் இது குறித்து மேலதிக விசாரணைகளைத் தியாகதுருகம் பொலிஸார் மேற்கொண்டுவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




இந்தியாவுக்கெதிரான இரண்டாவது டெஸ்டில்

# 109 ஓட்டங்களுக்குள் சுருண்ட இலங்கை

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்டின் தமது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 109 ஓட்டங்களையே இலங்கை பெற்றுள்ளது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரில், பெங்களூருவில் நேற்று முன்தினம் ஆரம்பமான இந்த பகலிரவு டெஸ்டின் நேற்றைய இரண்டாம் நாளின் ஆரம்பத்திலேயே தமது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இலங்கை பறிகொடுத்தது. துடுப்பாட்டத்தில், அஞ்சலோ மத்தியூஸ் 43, நிரோஷன் டிக்வெல்ல 21 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், ஜஸ்பிரிட் பும்ரா 5, மொஹமட் ஷமி 2, இரவிச்சந்திரன் அஷ்வின் 2, அக்ஸர் பட்டேல் 1 விக்கெட்டைக் கைப்பற்றினர். முன்னதாக, முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா, ஷ்ரேயாஸ் ஐயரின் 92, ரிஷப் பண்டின் 39, ஹனும விஹாரியின் 31, விராட் கோலியின் 23 ஓட்டங்களோடு சகல சகல விக்கெட்டுகளையும் இழந்து தமது முதலாவது இனிங்ஸில் 252 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. பந்துவீச்சில், லசித் எம்புல்தெனிய 3, பிரவீன் ஜெயவிக்கிரம 3, தனஞ்சய டி சில்வா 2, சுரங்க லக்மால் 1 விக்கெட்டைக் கைப்பற்றினர்.



## சர்வதேச மட்ட வீரர்களை கௌரவித்த அநுரகுமார

அஸ்ஹர் இப்றாஹிம்

சாய்ந்தமருது லீ மெரிடியன் வரவேற்பு மண்டபத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த 'சீரழிந்த தாயக்தை கட்டியெழுப்புகின்ற தீர்வு' சம்பந்தமாக நிகழ்வில் கலந்து கொண்ட தேசிய மக்கள் சக்தியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க, சாய்ந்தமருதைச் சேர்ந்த சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளன சர்வதேச கால்பந்தாட்ட மத்தியஸ்தராக கடமையாற்றிவரும் கல்முனை சாஹிரா தேசியக் கல்லூரி விளையாட்டு பயிற்றுவிப்பாளர் ஏ.எம். ஜப்ரான், இலங்கை சார்பில் கலந்து கொண்டு வெண்கலப் பதக்கம் பெற்ற வீரரும், கல்முனை சாஹிரா தேசியக் கல்லூரி உடற்கல்வித்துறை ஆசிரியருமான எம்.வை.எம். றக்கீப், ஐம்புலன்களால் 5 சாதனைகளை 12 நிமிடங்களில் நிகழ்த்தி சோழன் உலக சாதனை புத்தகத்தில்(cholan book of world records) தடம் பதித்த உலக சாதனை வீரர் எம்.எஸ்.எம். பர்ஸான் ஆகியாரை பாராட்டி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்தார்.



இங்கிலாந்து பிறீமியர் லீக்:

## டொட்டென்ஹாமை வீழ்த்திய யுனைட்டெட்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிரீமியர் லீக் தொடரில், தமது மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பருடனான போட்டியில் 3-2 என்ற கோல் கணக்கில் மன்செஸ்டர் யுனைட்டெட் வென்றது.

யுனைட்டெட் சார்பாகப் பெறப்பட்ட மூன்று கோல்களையும் கிறிஸ்டியானோ ரொனால்டோ பெற்றிருந்ததோடு, டொட்டென்ஹாம் சார்பாக ஹரி கேன் ஒரு கோலைப் பெற்றதோடு, மற்றைய கோல் ஓவ்ண் கோல் முறையில் பெறப்பட்டிருந்தது.

பிரீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில், 69 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றி காணப்படுகின்றது. 66 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் லிவர்பூலும், 56 புள்ளிகளுடன் மூன்றாமிடத்திலும் செல்சியும், 50 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் யுனைட்டெட்டும் காணப்படுகின்றன.

பாகிஸ்தானுக்கெதிரான இரண்டாவது டெஸ்டில்

## முன்னிலையில் அவுஸ்திரேலியா

பாகிஸ்தானுக்கெதிரான இரண்டாவது டெஸ்டின் அவுஸ்திரேலியா முன்னிலையில் காணப்படுகின்றது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், கராச்சியில் நேற்று முன்தினம் ஆரம்பித்த இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடி வரும் அவுஸ்திரேலியா, நேற்றைய இரண்டாம் நாள் முடிவில் தமது முதலாவது இனிங்ஸில் 8 விக்கெட்டுகளை இழந்து 505 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

தற்போது களத்தில், மிற்செல் ஸ்டார்க் 28, பற் கமின்ஸ் ஓட்டமெதுவும் பெறாமல் ஆட்டமிழக்காமலுள்ளனர். முன்னதாக, உஸ்மான் கவாஜா 160, அலெக்ஸ் காரி 93, ஸ்டீவ் ஸ்மித் 72, நேதன் 38, வோணர் 36, கமரொன் கிறீன் 28, ட்ரெவிஸ் ஹெட் 23 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்திருந்தனர்.

மேற்கிந்தியத் தீவுகள் எதிர் இங்கிலாந்து:


## வெற்றி தோல்வியின்றி முடிவடைந்த முதலாவது டெஸ்ட்

மேற்கிந்தியத் தீவுகள், இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், அன்டிகுவாவில் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பித்து நேற்று அதிகாலை முடிவுக்கு வந்த முதலாவது டெஸ்ட்டானது வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இங்கிலாந்து

இங்கிலாந்து: 311/10
(துடுப்பாட்டம்: ஜொனி பெயார்ஸ்டோ 140, பென் ஃபோக்ஸ் 42, பென் ஸ்டோக்ஸ் 36, கிறிஸ் வோக்ஸ் 28 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜேடன் சியல்ஸ் 4/79, ஜேஸன் ஹோல்டர் 2/24, அல்ஸாரி ஜோசப் 2/70, கேமார் றோச் 2/86)



மே. தீவுகள்: 375/10
(துடுப்பாட்டம்: என்குறுமாஹ் பொன்னர் 123, கிறேய்க் பிறத்வெய்ட் 55, ஜேஸன் ஹோல்டர் 45, ஜோன் கம்பெல் 35, ஜோஷுவா டா சில்வா 32, வீராசாமி பெருமாள் ஆ.இ 26 ஓட்டங்கள். பந்துவீச்சு: பென் ஸ்டோக்ஸ் 2/42, ஜேக் லீச் 2/79, கிறேய்க் ஒவெர்ட்டன் 2/85, டான் லோரன்ஸ் 1/0, மார்க் வூட் 1/45, கிறிஸ் வோக்ஸ் 1/88)

இங்கிலாந்து: 349/6
(துடுப்பாட்டம்: ஸக் குறொலி 121, ஜோ றூட் 109, டான் லோரன்ஸ் 37 ஓட்டங்கள். பந்துவீச்சு: அல்ஸாரி ஜோசப் 3/78, கேமார் றோச் 2/53, ஜேஸன் ஹோல்டர் 1/56)

மே. தீவுகள்: 147/4
(துடுப்பாட்டம்: என்குறுமாஹ் பொன்னர் ஆ.இ 38, ஜேஸன் ஹோல்டர் ஆ.இ 37, கிறேய்க் பிறத்வெய்ட் 33 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜேக் லீச் 3/57, பென் ஸ்டோக்ஸ் 1/24)

போட்டியின் நாயகன்: என்குறுமஹ் பொன்னர்

சீனா

# சீனாவில் மீண்டும் முடக்கம்



சீனாவில் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் மீண்டும் தீவிரமடைந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக அந்நாட்டின் வடகிழக்குப் பகுதியில் தொழில்துறை நகரமான சாங்சுன்னில் கொரோனோ வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து கடந்த 11 ஆம் திகதியிலிருந்து அந்நகரில் பொதுமுடக்கம் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அத்தியாவசியமான காரணங்கள் இல்லாமல் மக்கள் வீட்டை விட்டு வெளியேறக் கூடாது எனவும் அவ்வாறு மீறினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் அப்பகுதியில் வசிக்கும் சுமார் 9 மில்லியன் மக்கள் வீட்டுக்குள்ளேயே முடங்கியுள்ளனர்.

இந்நிலையில் குறித்த நகரில் உள்ள அனைத்து அத்தியாவசியமற்ற வணிக மற்றும் போக்குவரத்து இணைப்புகளையும் அதிகாரிகள் இடைநிறுத்தம் செய்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ரயில் தடம் புரண்டதில் 60 பேர் உயிரிழப்பு

### 50 க்கும் மேற்பட்டோர் படுகாயம்

ரயில் தடம் புரண்டதில் 60 பேர் உயிரிழந்த சம்பவம் மத்திய ஆபிரிக்க நாடான காங்கோ குடியரசில் 11 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

காங்கோ குடியரசில், போதிய பயணிகள் ரயில் சேவை இல்லாமல் மக்கள் சரக்கு ரயில்களில் சட்டவிரோதமாகப் பயணிக்கும் சூழல் நிலவி வருவதாகக் கூறப்படுகின்றது.



இந்நிலையில் அந்நாட்டின் லூயன் நகரில் இருந்து டென்கி நகரை நோக்கி பயணித்த சரக்கு ரயிலொன்று பள்ளத்தாக்குப் பகுதியொன்றில் சென்றபோது தடம்புரண்டு விபத்துக்குள்ளாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த ரயிலில் 100 க்கும் மேற்பட்டோர் பயணித்துள்ள நிலையில் ரயில் விபத்துக்குள்ளானதில் 60பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், 50 க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவமானது அந்நாட்டில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ரஷ்ய படையெடுப்பால்

## 1,300 உக்ரேன் துருப்புகள் பலி

### உக்ரேன் ஜனாதிபதி அறிவிப்பு

உக்ரேன் மீதான ரஷ்ய படையெடுப்பின் தொடக்கத்திலிருந்து சுமார் 1,300 உக்ரேன் துருப்புகள் கொல்லப்பட்டுள்ளனர் என்று அந்நாட்டு ஜனாதிபதி வொலோடிமிர் ஜெலென்ஸ்கி அறிவித்துள்ளார் என, சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கிய்வ் மீதான தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் முதல் முறையாக சனிக்கிழமையன்று மேற்குறிப்பிட்ட தகவலை, ஊடக சந்திப்பொன்றில் ஜெலென்ஸ்கி அறிவித்துள்ளார்.

மார்ச் மாதம் 2ஆம் திகதியன்று கிட்டத்தட்ட 500 வீரர்களை இழந்ததாக ரஷ்யா தெரிவித்திருந்த போதும் ரஷ்யா சுமார் 12,000 வீரர்களை இழந்துள்ளதாக உக்ரேனிய ஜனாதிபதி கூறியுள்ளார்.

இது ஒன்றுக்கு பத்து என்ற விகிதம் எனவும் அது தனக்கு மகிழ்ச்சியைத் தரவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

உக்ரேன் மீதான படையெடுப்புக்கு ரஷ்ய இராணுவம் சுமார் 150,000 வீரர்களை அர்ப்பணித்துள்ளது.

பேரழிவுக்குள்ளான துறைமுக நகரமான மரியுபோலுக்கு உதவி பெறுவதற்கான புதிய முயற்சிகளுக்கு மத்தியில், ஏனைய உக்ரேனிய நகரங்களிலுள்ள பொது மக்கள் பகுதிகளைத் தாக்கிவரும் ரஷ்யப் படைகள் கிய்வ் மீதான தாக்குதலை சனிக்கிழமையன்று அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



உக்ரேன்

## போர்க்களத்தில் பிறந்த குழந்தை

உக்ரேனில் குடியிருப்புகள், வைத்தியசாலைகள் உள்ளிட்ட பல இடங்களில் ரஷ்யா தீவிரமாகத் தாக்குதல் நடத்தி வருகின்றது.

அந்த வகையில் மரியுபோல் நகரில் உள்ள மகப்பேறு வைத்தியசாலையொன்றிலும் கடந்த 9 ஆம் திகதி ரஷ்யா குண்டுத் தாக்குதல் நடத்தியுள்ளது.

இத்தாக்குதலினால் குறித்த வைத்தியசாலையில் பிரசவத்துக்காக அனுமதிக்கப்பட்டிருந்த மரியானா விஷேகிர்ஸ்கயா என்ற பெண் காயமடைந்த நிலையில் அங்கிருந்து வேறு ஒரு வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

இந்நிலையில் அப்பெண் கடந்த 11 ஆம் திகதி அங்கு பெண் குழந்தையொன்றையும் பெற்றெடுத்துள்ளார். அக்குழந்தைக்கு வெரோனிகா (Veronika) எனப் பெற்றோர் பெயர் சூட்டியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உக்ரேன்

## உக்ரேனுடன் கைகோர்த்த கூகுள்




உக்ரேன் மீது ரஷ்யா கடந்த 24 ஆம் திகதி முதல் தாக்குதல் நடத்தி வருவதால், அந்நாட்டின் மீது அமெரிக்கா, பிரித்தானிய உள்ளிட்ட பல நாடுகள் அடுக்கடுக்கான பொருளாதாரத் தடைகளை விதித்து வருகின்றன.

மேலும் புகழ்பெற்ற தொழில்நுட்ப நிறுவனங்களா மைக்ரோசொப்ட், அப்பிள், ஐ.பி,எம், விசா மற்றும் மாஸ்டர் கார்ட், அத்துடன் நெட்பிளிக்ஸ், டிக்டொக் உள்ளிட்ட பல நிறுவனங்கள் தமது சேவையை ரஷ்யாவில் நிறுத்தியுள்ளதாக அறிவித்துள்ளன.

அந்த வகையில் கூகுள் நிறுவனம் உக்ரேனுக்கு உதவும் வகையில் ரஷ்யாவின் வான்வெளி தாக்குதல் குறித்த எச்சரிக்கையை முன்கூட்டியே அறியும் படியான அப்டேட் ஒன்றை ஆண்ட்ரொய்ட் பயனாளிகளுக்கு அறிவித்துள்ளது.

இதுக்குறித்து கூகுள் நிறுவனம் கூறியதாவது "லட்சக்கணக்கான மக்கள் உக்ரேன் அரசின் வான்வெளி தாக்குதல் குறித்த சைரன்களை நம்பியே பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல இருப்பதால், கூகுள் நிறுவனம் உக்ரேன் அரசுடன் இணைந்து இச் சேவையை வழங்கவுள்ளது" எனத் தெரிவித்துள்ளது.

சவூதி அரேபியா

## ஒரே நாளில் 81 பேருக்கு மரண தண்டனை



சவூதி அரேபியாவில் ஒரே நாளில் 81 பேருக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்ட சம்பவம் உலகளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அத்துடன் அங்கு கொலை, தீவிரவாத செயல், பாலியல் பலாத்காரம் போன்ற குற்றச் செயல்களில் ஈடுபடுவோருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் (12) 81 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2021 ஆண்டு முழுவதும் அங்கு நிறைவேற்றப்பட்ட மொத்த மரண தண்டனைகளை விட, இது அதிகம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன் தண்டனை நிறைவேற்றப்பட்ட அனைவரும் பல கொடூரமான குற்றங்களைச் செய்தவர்கள் எனவும், அவர்களில் பலர் பயங்கரவாத இயக்கமான ஐ.எஸ்.ஐ.எஸ், அல்கொய்தா, யேமனின் ஹுதி கிளர்ச்சிப் படைகள் தொடர்புடைய மற்றும் அவர்களுக்கு ஆதரவாகச் செயல்பட்ட குற்றவாளிகள் என்று சவூதி அரசு தெரிவித்துள்ளது.

மேலும் குறித்த 81 பேரில் 73 பேர் சவூதியைச் சேர்ந்தவர்கள் எனவும், 7 பேர் ஏமனைச் சேர்ந்தவர்கள் எனவும் ஒருவர் சிரியாவைச் சேர்ந்தவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் திங்கட்கிழமை, 14 மார்ச் 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.